அருள் ஒளி



வெளியீடு : ஸ்ரீ ஆறுமுகதேவ் சேவைத்தாபனம்.
தெல்லிப்பழை. இலங்கை.
2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரசித்தி பெற்ற மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகி அம்மன் கோவில்



யோகர் சுவாமி
குருபூசை தினம் - பங்குனி ஆயிலியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்:
செஞ்சொற்செல்வர்
திரு. இரு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்:
வாவுகுரு கா. சிவபாலன் அவர்கள்

2005 தாரண வருடம் பங்குனி மாதம்

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை

மலர் 32

இந்து வாலிபர்களுக்கு ஓர் முன்னுதாரணம்

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது.

- திருவள்ளுவர்

இந்துவாலிபர்கள் ஒன்றுகூடி இன்ன அறப்பணிகளை நிறைவேற்றி வருகின்றார்கள். இந்து இளைஞர் மன்றங்களுக்கும், இந்துவாலிபர் சங்கங்களுக்கும் முன்னுதாரணமாக விளங்குவது வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம் என்றால் மிகையாகாது. 1931ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பெற்ற இம்மன்றம், இன்று உன்னத வளர்ச்சி கண்டுள்ளது. கல்விப்பணி, ஏழைச்சிறார்களில் வாற்றல் மேம்படுத்தும் பணி, ஆலயப்பணி, திருமணமாகா பாடுபணி, விழாக்கலைப்பணி இவற்றிற்கு அப்பால் அவலப்படும் அகதிகளுக்கு ஆறுதல் சேர்க்கும் பணி என இவர்களது தொண்டுப்பணி தொடர்ந்து மேலோங்கி இருக்கிறது. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு எனும் மகுடவாசகம் இவர்களது சங்க இலட்சினையாக அமைந்துள்ளது. மகுட வாக்கிற்கு அமைவாக மகிமை சேர்ப்பவர்களாகச் சங்க உறுப்பினர்கள் செயற்பட்டு வருகின்றனர். தடா நாட்டில் முன்னுதாரணமாகக் குறிப்பிடக்கூடிய அளவிற்குத் தங்களை நிலைநாட்டியுள்ளனர். கிழக்கு இலங்கையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்திற்கு உள்ளாகி மனிதர்களோடும், அகதிப் பொருட்களோடும் சென்று ஆற்றிய பணியை வார்த்தைகளால் இல்லை. கலாசார இயற்கை அனர்த்தத்தினால் துன்புற்ற மக்களுக்கு எல்லா இந்து வாலிபர் சங்கம் தொடர்ந்து பணி ஆற்றி வருகின்றது. மட்டக்களப்பு நகர் வெள்ளம் உணவு, உடை, பல்வேறு உபகரணங்கள், துவிச்சக்கர வண்டிகள் கொடுத்துதவிய இச்சங்கம், பல்லாயிரம் மக்கள் மனதில் நிலைத்து நீங்காப் பேறு பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு, கனடா, இலண்டன் முதல் அவுஸ்திரேலியா நியூசிலாந்து வரை இச்சங்கத்தின் கிளைகள் விரிவு பெற்று இருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். சங்கத்தின் வளர்ச்சியை உழைப்பின் ஊடாகவும் பெருக்குகின்ற முறையினை இவர்கள் பின்பற்றுகின்றார்கள். தொலைத்தொடர்பு நிலையம், பந்தல், கதிரை, சோடனைப்பொருட்கள் விநியோகம், திருமண மண்டபப்பணி என்பவற்றின் ஊடாகக் கிடைக்கும் வருவாய்களை வளமான அறப்பணிகளுக்கு வாரி வழங்குகின்றார்கள். பல பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாதாமாதம் இவர்கள் வழங்கும் நிதி அவர்களது கல்விக்குப் பெருந்துணையாக விளங்குகின்றது. பல்வேறு போட்டிகளை சங்கானைக் கோட்டப் பாடசாலைகளிடையே நடாத்திப் பரிசில் வழங்கி வருகிறார்கள். இவர்களை ஆற்றுப்படுத்திய எங்கள் தேவஸ்தானத்துச் செயலாளரும், அதிபருமான அமரர் சு. சிவவாகீசர் போன்ற பெரியவர்களின் நினைவாக வருடா வருடம் தங்கப்பதக்க விருது வழங்குவது குறிப்பிடத்தக்கது. உயர்நீதிமன்ற நீதியரசராக விளங்கிய திரு. சி. வி. விக்கினேஸ்வரன், அன்னை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, நல்லை ஆதீன முதல்வர் போன்ற பெரியவர்கள் இச்சங்கத்தின் வியத்தகு பணிகளை மற்றவர்களையும் பின்பற்றுமாறு விதந்துரைத்திருப்பது கவனத்திற் கொள்ள வேண்டியது. இந்து இளைஞர் மன்றங்களே, வாலிபர் சங்கங்களே! நீங்கள் இவர்களை நாடி இவர்களது முயற்சிகளின் படிக்கற்களை அறிந்து உங்கள் பணியை மேம்படுத்துங்கள். இவர்களது கடின உழைப்பை ஏனைய சங்கங்களும் பின்பற்றுமானால் எங்கள் தேவைகளை நாமே பூர்த்தி செய்யும் நிலை நாட்டில் உருவாகும். இந்து நிறுவனங்கள் விழாக்களை மட்டும் நடத்தாது விருட்சங்களாக நின்று நிலைப்பதற்கு இவர்கள் ஓர் உதாரண நிறுவனமாக வழிகாட்டுகிறார்கள்.

இளைஞர்கள் பணி நமது நாட்டுக்கு வேண்டப்படுவதாகும்.

– ஆசிரியர்

சக்தி

சக்தியின் திருநாமங்கள் பல. பரமசிவனின் இடப்பக்கத்தில் இருக்கும்போது '**உமாதேவி**' என்றும் காஞ்சிபுரத்தில் ஏகாம்பரநாதரின் இடப்பக்கத்தில் '**காமாட்சி**' என்றும், சிதம்பரத்தில் ஆனந்த தாண்டவம் செய்யும்போது நிருத்தசாட்சியாக '**சிவகாமசுந்தரி**' என்றும், மதுரை சோமசுந்தரபொருமான் இறைவன் சௌந்திர பாண்டியனான போது '**தடாதகைப்பிராட்டி**' என்றும் காசி விசுவநாதப் பெருமானுடன் இருக்கையில் '**விசாலாட்சி**' என்றும் பல்வேறு திருநாமத்தில் அருள்புரிகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்சிகரமான சீர்திருத்தக் கருத்தமைந்த நூல் திருமந்திரம்

சிவத்தமிழ்ச்செல்வி
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, J.P. அவர்கள்

"ஒன்றே குலம்; ஒருவனே தேவன்" என்று நான்காம் நூற்றாண்டிலேயே சீர்திருத்தமான-புரட்சிகரமான கருத்தைக் கூறிய நூல் திருமந்திரமாகும். அது தோத்திர நூல்-சாத்திரநூல் எனப்படுவதை விட வாழ்க்கை நூல் எனக் கூறலே பொருத்தமும் உண்மையும் ஆகும்.

திருக்குறளிற்கும், திருமந்திரத்திற்கும் ஒரே ஒரு வேறுபாடுண்டு. திருக்குறள் அறம், பொருள், இன்பம் மூன்றினையும் முன்வைத்து வீட்டை மறை பொருளாகக் கூறுகின்றது. திருமந்திரமே வீடு பெறுதலை முதன்மையாக வைத்து அறம், பொருள், இன்பத்தை மறை பொருளாகக் கூறுகிறது. எனவே தான் திருக்குறளை வாழ்க்கை நூல் எனக் கூறும் நாம், திருமந்திரத்தையும் வாழ்க்கை நூல் என்றே கூற வேண்டியவர்களாகின்றோம்.

ஐம்புலனை அடக்குங்கள், அடக்குங்கள் என்று தான் அறநூல்கள் பல வலியுறுத்துகின்றன ஆனால் திருமூலர் ஐம்புலனை அடக்க வேண்டாம் எனத் திருமந்திரத்தில் கூறுகிறார். அவர் அதற்குச் சொல்லும் விளக்கம் மிகவும் அற்புதமானது. ஐம்புலனை அடக்குவதற்காக ஆண்டவன் எம்மைப் படைத்தான் ஒரு மனித உடம்பில் இயல்பாக உள்ள உணர்ச்சிகளை அடக்குவது முறையா? இ.ஃது இறைவனுக்குத் தெரியாதா? இறைவன் நமக்கு ஐம்புலனை அடக்குவதற்காக ஐம்பொறிகளைத் தரவில்லை. அவற்றை நேரிய வழியில் பயன்படுத்தி அவை வாயிலாக நல்லறிவைப் பெறவே படைத்துள்ளான். ஐம்பொறிகளையும் அநுபவிப்பது எப்படி? என்பதிற்றான் திருமூலர் ஆணித்தரமான விளக்கத்தைக் கண்டிப்புடன் கூறுகிறார்.

நல்ல அனுபவங்களில் ஐம்புலனைத் திருப்பி விடல் வேண்டும் என்பதுதான் திருமூலர் மந்திரவாக்கு. நல்ல அநுபவங்கள் பல உள. அவற்றுள் தலைமையானது என்றுமே இறவாத இன்ப அனுபவமாகும். ஐம்புலனையும் இறைவனை அனுபவிக்கும் வழியில் திசை திருப்பிவிட்டால் மானிடப்பிறவி மிகவும் பேறுபெற்ற பிறவியாக அமைந்து விடும். நிலையற்ற நமது உடம்பை மிகவும் ஓம்புதல் வேண்டும் என்கிறது வாழ்க்கை நூலாகிய திருமந்திரம்.

"உடம்பினை நான் இழுக்கென்று இருந்தேன்"

உடம்பிலே உத்தமன் கோயில் கொண்டதால் உடம்பினை நான் இன்று ஓம்புகிறேன் என்று கூறும் திருமூலர் உடம்பில் இறைவன் குடிகொண்டுள்ளான். ஆகவே உடம்பைப் பேணிக்காத்துக் கொள்ளுங்கள் என்று நமக்கு நல்வழி காட்டுகின்றார்.

இருட்டறை மூலையில் இருந்த கிழவி, குருட்டுக்கிழவனைக் கூடக்கருதி, குருட்டினை விளக்கி, குணம் பல காட்டி மருட்டியவனை மணம் புரிந்தனளே இது திருமந்திரத்தில் ஒரு மந்திர வாசகமாகும். மேலோட்டமாகப் பார்த்தால் இந்த மந்திரத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் ஏதோ வேடிக்கைக் கதை மாதிரித் தோன்றுகிறது. ஆனால் ஆழ்ந்து அதன் உட்பொருளை நோக்கும் போது அழியாத ஒரு பேருண்மையை நாம் உணருகின்றோம். கிழவியாகிய சக்தியோகம், இருட்டு உலகில் வாழ்கின்ற ஆன்மாவைத் தூய்மைப்படுத்தக் கருதி குருட்டுத் தன்மையாகிய ஆணவத்தையும் வலிகெடச் செய்து மெய்யுணர்வு நல்கி வீடு பேறளிக்கின்றது. இப்பொருளைத்தான் திருமந்திரம் அருமந்திரமாக நமக்கு உணர்த்துகிறது.

சக்தியென்னும் யோக நிலையைப் பின்பற்றினால் இத்தகைய நன்மை விளையும். அவ்வாறின்றி உலக ஆசாபாசங்களில் அதிகமாக உழன்று கொண்டிருந்தால் அடையும் கதி என்ன? அதையும் உடைத்து, விரித்து, தெளித்து விளக்குகின்றது திருமந்திரம். ஒருவன் தன் மனைவி செய்து வைத்திருந்த அடிசிலை உண்டான். பின் அந்த மடக்கொடியாளொடு இன்பம் கொண்டான். இத்தனையும் முடிந்தபின் இடப்பக்கம் சிறிது நோகுது என்றான். சிறிது நேரம் படுக்கையில் படுத்தான். முடிவு..... படுத்தவன் ஒழிந்தே விட்டான். இதனைத் திருமூலர்;

"அடம்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாளொடும் மந்தணம் கொண்டார்
இடப்பக்கமே இறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே" பாடல் 148

தானுண்டு; சோறுண்டு; தன் வீடுண்டு! என்று வாழ்ந்தே பழகினவர்களின் கதியைப் பார்த்தீர்களா? இறைவன் நம்மை ஆட்கொள்ள நாம் என்ன செய்யவேண்டும்? அவமே ஒழிந்தார் என்னும் ஈனச் சொல்வாரா வண்ணம் காத்துக்கொள்ள நாம் செய்ய வேண்டியது என்ன?

தாய் ஒருத்தி ஒரு பொருளைத் தான் பெறும் பொழுது, அடையும் மகிழ்ச்சியை விடத் தன் பிள்ளை பெறும் பொழுது அடையும் மகிழ்ச்சி அளப்பரியது. அதைப் போல் நாம் இறைவனுக்குக் கொடுக்க நினைப்பதையெல்லாம், இறைவன் உறையும் இதயங்களைக் கொண்டிருக்கும் ஏழைகளுக்கு வழங்கினால், அ.ஃது இறைவனுக்கு எவ்வளவோ மகிழ்ச்சியைக் கொடுக்கும். இவ்வாறு திருமந்திரம் எடுத்துக்கூறுகின்றது.

"அருள்ஒளி" வாசகர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

"அருள்ஒளி" மாதம் தோறும் வெளிவந்து கொண்டு இருக்கிறது. இம்மலருக்கு பொருத்தமான தரமான ஆக்கங்களை நாம் எதிர்பார்க்கிறோம். நீங்கள் எங்களுக்கு அனுப்ப வேண்டிய முகவரி

ஆசிரியர்
"அருள்ஒளி"
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

ஆசிரியர்
"அருள்ஒளி"
திருமகள் அழுத்தகம்,
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்புள்ள சமுதாயத்தை உருவாக்குவோம்

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

யான், எனது என்னும் இருவகைப் பற்றுக்கள் எம்மை விடாது பற்றிக் கொண்டிருக்கின்றன. இவையே நாம் அனுபவிக்க வேண்டிய இன்பங்களை அனுபவிக்கவிடாமல் தடுக்கின்றன. இந்த இடத்திலேயே சமயம் நமக்கு உதவமுன் வருகின்றது. சைவசமயத்தின் நோக்கம் எம்மைக் கடவுளின் மீது பற்றுவைக்கச் செய்வதாகும். துன்பம் தருவனவற்றில் பற்றுவைக்காது தடுப்பதும் அதன் இன்னொரு நோக்கமாகும். புன்னெறியதனிற் செல்லும் போக்கினை மாற்றி மேலாம் நன்னெறியதனிற் செல்ல எமக்கு வழிகாட்டுவது சமயம். இதனால் நாம் அடைய விரும்பும் இன்பத்தை அனுபவிக்க முடிகிறது. இந்த நிலையில் ஒன்றின் மேல் வைத்த பற்றைப் போக்குவதற்கு இன்னொன்றின் மேல் பற்று வைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. கெட்ட நண்பனின் பிடியிலிருந்து விலக வேண்டுமானால், நல்ல நண்பனைத்தேடி அவனுடன் உறவு கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. இது சாதாரண உலகநிலை. இவ்வாறே, துன்பங்களுக்குக் காரணமான பற்றுக்கள், ஆசை அவாக்கள் என்பவற்றை விட்டு நீங்க வேண்டுமாகில் அதற்கு ஒரே வழி, எவ்வித பற்றுக்களும் இல்லாத கடவுளை இறுகப் பற்றுதலேயாகும். கடவுள் விருப்பு வெறுப்பு அற்றவர். பற்று, ஆசை, அவா என்று கடவுளுக்கு எதுவும் கிடையாது. இதனையே வள்ளுவப் பெருந்தகையும்,

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" என்கிறார்.

கடவுளிலே எமது பற்றினை எப்படி நாம் வளர்க்கலாம்? பற்று பரிச்சயத்தின் மூலம் வளர்கிறது; அடிக்கடி அளவளாவி அன்பு காட்டி, கிடைக்கும் இன்பத்தில் பங்கு கொண்டு மகிழ்வதன் மூலம் பற்று இறுக்கமாகிறது. பின்னர் ஒரு நிலையில், பிறவற்றையெல்லாம் முற்றாக மறந்து, பற்றுவைத்த குறித்த அந்த ஒன்றினையே எந்நேரமும் விடாது சிந்தித்து, அதனுடன் உணர்வு பூர்வமாக ஒன்றித்து, உறவாடி, எவ்விதத்திலும் விட்டு நீங்காது, உடனுறையும்போது பற்று முற்றி முழுமை பெறுகின்றது.

கடவுளைக் காலையிலும்; மாலையிலும்; மற்றும் நேரங்களிலும்; நின்றும் இருந்தும்; கிடந்தும் நடந்தும்; மற்றும் பணிகளைச் செய்யும் போதும்; கடவுளை நினைந்து; அன்போடு தியானிப்பதால் கடவுள் மீது எமது பற்றினை வளர்த்துக் கொள்ளலாம். திருக்கோயில் வழிபாட்டினாலும்; பிரார்த்தனைகள், திருமுறை ஓதுதல் போன்றவற்றாலும்; கோயில்களில் திருத்தொண்டுகள் செய்வதினாலும்; கடவுளின் படைப்புக்களான மனிதர்களையும், ஏனைய உயிரினங்களையும் நேசித்துச் சேவிப்பதாலும்; தான் மேற்கொண்டுள்ள தொழில்களை நேர்மையுடனும் தூய்மையுடனும் செய்வதாலும்; எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமென்று எண்ணங்கொள்வதாலும்; அவ்வாறே சொல்லிலும் செயலிலும் நிறைவேற்றுவதாலும் கடவுளிலேயுள்ள எமது பற்றினை நன்கு இறுக்கமாக்கிக் கொள்ளமுடியும். இவ்வாறு வாழ்க்கையை நாம் செம்மையாக அமைத்து, வாழ்வாங்கு வாழும்போது கடவுளிலேயுள்ள பற்று முற்றி முழுமை பெற்று, நாமும் தெய்வீக நிலையைப் பெற்று விடுகின்றோம். இந்த நிலை கிட்டும்போது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம், பிணியறியோம், பணிவோமல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை"

என அப்பரடிகள் கூறிய அந்த உயர் விழுமிய நிலையை அடையப் பெற்று விடுகிறோம்.

சிறுவயதிலிருந்தே கடவுளில் பற்று வைக்கும் பழக்கத்தையும், பயிற்சியையும் பிள்ளைகளுக்குத் தருவது தந்தை, தாய், ஆசிரியர், சுற்றத்தவர், சமூகப்பெரியார்கள் ஆகியோரின் தலையாய கடமையாகும். இத்தகைய பழக்கத்தை தமது போதனை மூலத்திலும் பார்க்கக் கூடுதலாக வாழ்க்கையில் கடைப்பிடித்து நடந்து காட்டுவதன் மூலமாக ஏற்படுத்தப்படுவது அதிக பலனைத்தரும். பண்டைய சமூகங்களில் மூத்த தலைமுறையினர் இளந்தலை முறையினருக்கு இத்தகைய நல்ல பழக்க வழக்கங்களைச் சாதனைகள் வாயிலாக அளித்து வந்ததன் நிமித்தம் சமூகங்களில் ஒழுங்கு, கட்டுப்பாடு, சாந்தி என்பன நிலவின. சமுதாயங்களில் குழப்பங்கள் இன்றி நிம்மதி இருந்தது. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம் என இளையோரால் உளங்கொள்ளப்பட்டு வந்தது. மூத்தோரும் சொற்படி நடந்துங் காட்டினார்கள். பிள்ளைகளும் சொல்வழி கேட்டு நடந்து வந்தனர். இந்த விழுமிய நிலையினை மீளவும் நமது சமுதாயத்தில் மலரச் செய்தல் அவசியமாகிவிட்டது. மூத்தோர்கள், வளர்ந்தவர்கள் மனம் போன போக்கில் நடந்து கொண்டு தம் பிள்ளைகளைத் திருத்த முயல்வதோ, அவர்களுக்கு ஒழுக்கம் கற்பிப்பதோ, பயன்தரக்கூடிய செயல்களல்ல. பிள்ளைகள் ஏனையோரைப் பார்த்து அவர்களைப் போல நடக்கும் இயல்பினர். எனவே பிறரைத் திருத்து முன் தாம் திருந்தி நடந்து கொள்ளுதல் மிக அவசியம். சிறு பராயத்தில் பிள்ளைகள் கற்கும் நல்ல ஒழுக்கப் பண்புகள், விழுமியங்கள் என்பன என்றும் நிலைத்து நிற்கக் கூடியன. வீட்டில் தாய் தந்தையர்களும், பாடசாலையில் ஆசிரியர்களும், சமூகத்தில் பெரியவர்களும் நல்லமுறையில் வாழ்ந்து காட்டுவதன் மூலம், பிள்ளைகளும் இவர்களைப் பார்த்து நல்வாழ்வு வாழக் கற்றுக்கொள்வர். நாம் ஒவ்வொருவரும் இதனை உணர்ந்து, நல்ல பண்புள்ள சமுதாயத்தை உருவாக்க முயல்வோமாக.

சிவபூமி கண்தானச் சபை

தானங்களில் சிறந்த தானமான கண் தானத்தைச் செய்ய முன்வாருங்கள்
உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்று இருக்கும் ஒருவருக்கு
ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே
இப்புண்ணிய காரியத்துக்
ஒப்புதல் தாருங்கள்.

தொடர்புகளுக்கு:
ஆறு.திருமுருகன்
தொலைபேசி
021-222 6550

கண் வைத்திய நிபுணர்கள்:
Dr. ச. குகதாசன், 021-222 3645
Dr. சிவந்தா, 021-222 3149
யாழ்.போதனா வைத்தியசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரத் தமிழ்ச்சுவை

சைவத்திரு சிவ: சண்முகவடிவேல் அவர்கள்

முத்தி சித்திக்க வல்ல பத்தி பழுத்த வைந் தமிழில் சிவபெருமான் மீது திருப்பதிகங்கள் தேன் மழையாகச் செழிக்கப் பாடவல்லவர் சுந்தரமூர்த்திநாயனார். சிவபெருமானே தமது அழகைப் பார்த்துச் "சுந்தரா" என்று வியப்ப ஆலால சுந்தரர் வந்தார் என்ற வரலாறும் உண்டு. சுந்தரம் என்றால் அழகு எனப்பொருள்படும். தீந்தமிழில் சுந்தரமூர்த்திநாயனார் அருளிய தேவாரத்திருப்பதிகங்களைச் 'சுந்தரத் தமிழ்' என்று அழைப்பதை அறிஞர் தவறு எனத் தள்ளமாட்டார்.

"இந்திரன் மால்பிரமன் எழிலார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ள என்னை மத்தயானை அருள்புரிந்து"

என்று வன்றொண்டர் வாக்காக வருவதனால் அந்தரத்தரத்தவர்களும் மந்திரமாக மதித்த தமிழ் ஏழாம்திருமுறை.

"சூழிசை யின்கரும்பின் சுவைநாவல ஊரன் சொன்ன ஏழிசை இன்தமிழால் இசைந்து ஏத்திய" ஏழாம் திருமுறைக்குத் தனியான புகழிசைப் பொலிவு உண்டு.

ஏனைய திருமுறைகளில் பரக்கக் காணுதற்கரிய பண்பு சுந்தரர் தமிழிற்கு உண்டு. ஆரூரில் அம்மான் அருளிய தோழமை உறவின் உரிமை தானோ அல்லது சிவபெருமானிடத்தில் கனிந்து பழுத்த பத்திமை அன்பு தானோ அறியோம். சுந்தரமூர்த்திநாயனார் பல பதிகங்களில் தடுத்தாட்கொண்ட தம்பிரான் மீது மெத்த இடாங்கு முடாங்காகப் பண்ணிசைப் பாடினார், பரவினார், பணிந்தார்.

கடவுள் எம்மோடு கதைப்பாரா? கருங்கல்லாக இருக்கும் கடவுள் வாய் திறந்து வார்த்தை ஆடுவாரா? என்னும் ஆராய்வு ஆதிநாளிலிருந்து தொடர்ந்து வரவும் சுந்தரர் செந்தமிழால் அந்தமில் அமரக் கோமானை ஏவல் கொண்டதை என்னென்பது; அதுவும் ஆண்டான் அடிமையைக் கட்டளை இடுவது போல அல்லவா பணிகொள்கின்றார்.

சுந்தரமூர்த்திநாயனார் திருவாரூரிலிருந்து புறப்பட்டுச் சேரநாட்டை நாடிச் செல்லுகின்றார். செல்லும் வழியில் கொங்கு நாட்டிலுள்ள திருப்புக்கொளியூர் அவிநாசித்தலத்தைச் சென்று அடைகின்றார், அங்கு ஒரு செய்தி சுந்தரமூர்த்தி நாயனார் திருச்செவிக்கு எட்டுகின்றது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மடுவில் குளிக்கச் சென்ற அந்தணனைச் சிறுவனை முதலை விழுங்கிவிட்டது.

பிள்ளையை இழந்த பெற்ற பிதா மாதாக்களைக் கண்ட மாத்திரத்தில் சுந்தரர் உள்ளத்தில் இரக்கம் ஊற்று எடுக்கின்றது. விழுங்கிய முதலை வாயினின்றும் பிள்ளையை மீட்டுக்கொடுத்தே சேர நாட்டைச் சென்று சேரத் தீர்மானித்தார். சுந்தரமூர்த்திநாயனார் திருப்புக்கொளியூர் அவிநாசி அப்பர்மீது அருந்தமிழ் அறைந்தார்.

பதிகத்தில் நாலாம் பாடலில் பெருங்கருணை நாயகி சமேத அவிநாசி அப்பர் திருச்செவியில் சேரத் தமது முறைப்பாட்டை நிறைவேற்றித் தரக்கட்டளை இட்டு ஏவுகின்றார்.

"புரைக்காடு சோலைப் புக்கொளி யூரவி நாசியே
கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரணமாக மனைவி கணவனுக்கு வேலையை ஏவ முடியாது. பிள்ளை பிதாவிற்கு கட்டளை இட முடியாது. சீடன் குருவிற்கு ஏவ முடியாது. அடிமை ஆண்டானுக்கு உத்தரவிட முடியாது. தொழிலாளி முதலாளியிடத்தில் அதிகாரம் பண்ண முடியாது. இங்கே நம்பியாரூரர் கொஞ்சமேனும் அஞ்சாமல் நெஞ்சத்துணிவோடு சிவபிரானிடத்தில் செப்பும் அதிகாரத்தொனியின் மிடுக்குத் தான் என்னே! புக்கொளியூர் அவிநாசியே! என்று விழித்து அல்லவா விளம்புகின்றார். கரைக்கால் முதலையைப் பிள்ளையைத் தரக் எமனுக்குச் சொல்லு என்று ஏவுகின்றார். ஆதியும் அந்தமுமான அத்தனிடத்தில் ஆரூரரால் அன்றி வேறு ஆரால் அவ்வாறு அறைய முடியும்? இந்தச் சுந்தரத்தமிழிற்கு நிகரேது! விலை ஏது! சுவை ஏது!!

சுந்தரர் சுவை மிக்க தமிழால் பரம்பொருளோடு பலமுறை பயின்றுள்ளார். பரவை மாளிகைக்கு நெல்லை எடுத்துச் சுமப்பதற்கு ஆள் வேண்டி ஆண்டானிடத்தில் மீளா அடிமையார் அறையும் முறை இது:

"கோளிலி எம்பெருமான் குண்டை யூர்ச்சில
நெல்லுப் பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை அட்டித் தரப்பணியே"

இசைஞானி காதலன் இதனோடு இறைவனை விட்டாரா?

சுந்தரமூர்த்தி நாயனார் சேரநாட்டிலிருந்து சோழநாட்டிற்குத் திரும்பி வந்து கொண்டிருந்தார். சேரமான் பெருமாள் நாயனார் வேண்டிய சொத்துச் சுதந்திரங்களைக் கொடுத்திருந்தார். அவற்றை எல்லாம் ஆட்கள் மேல் சுமத்தி அனுப்பிவிட்டார். திருமுருகன் பூண்டிக்கு அருகாக வரும்போது ஆறலைகள்வர் சொத்துக்களைக் கவர்ந்து கொண்டார்கள்.

பண்டாரம் பறியுண்டதை அறிந்த பாவலர் கோன் திருமுருகன் பூண்டி ஆலயத்தை நாடிவந்தார்.

கல்லாக அமர்ந்து கருணை புரியும் கடவுளைப் பார்த்து முதற்கேட்ட முறைப்பாடு இது.

சிறுத்த இடையோடு கூடிய ஆவுடை நாயகியோடு எதற்காக இங்கு இருக்கின்றீர்கள்?

".....முரு கன்பூண்டி மாநகர்வாய்
இடுகு நுண்ணிடை மங்கை தன்னொடும் எத்துக்
கிங்கிருந் தீர்எம்பி ரானிரே"

சுந்தரமூர்த்தி நாயனார், நீலாயதாட்சியம்மை சமேத காயாரோகணேசுவரரைத் திருநாகைக் காரோணத்தில் தரிசித்து என்ன கேட்கிறார்? எப்படிக் கேட்கிறார்? என்கின்றார் பாருங்கள்!

"முத்துமாலை, மணி செறிந்த வயிரமாலை, கத்தூரி, கமழ்சாந்து, நல்ல மூக்குக் கண்ணாடி, ஆடை ஆபரணம் பெருஞ்செல்வம், நல்ல கறியோடு நெய்சோறு மூன்று வேளை தரவேண்டும். திருவீழிமிழலையில் அன்புடை அடியார்கள் வருந்தாமல் உண்பதற்கு நாளும் பொற்காசு புரிந்து அளித்தீர். இன்று எனக்குத் தாரும் தராதிருந்தால் அடி எடுக்க விடமாட்டேன். நாளை "கண்ணறையன் கொடும் பாடன் என்றுரைக்க வேண்டாம்" என்றல்லவா திருப்பதிகத்தில் மிடுக்கோடு அடுக்கிக் கொண்டு போகின்றார்.

நம்பியாரூரர் கேட்டதை எல்லாம் தம்பிரான் உம்பரார் உவக்கக் கொடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்புக்கொளியூரில் முதலை வாயினின்றும் அந்தணச் சிறுவனை தருவித்துக் கொடுத்தார்.

ஆரூரில் அம்மான் பூதங்கள் மூலம் பரவை மாளிகைக்கு நெல் எடுத்துக் கொடுப்பித்தார்.

சுந்தரர் திருமுருகன் பூண்டி வழியில் வேடுவரால் பறிக்கப்பெற்ற செல்வங்களைச் சிவபெருமான் திரும்ப வாங்கிக் கொடுத்தார்.

திருநாகைக் காயாரோணத் திருத்தலத்தில் சுந்தரமூர்த்திநாயனார் கேட்டவற்றை எல்லாம் சிவபிரான் இல்லை என்னாது ஈர்ந்தார்.

வன்றொண்டர் சிவபெருமானிடத்தில் 'சண்டித்தனகாரர்' போலக் கேட்டுப் பெற்றுக்கொண்டவை இவை போல்வன அனேகம்.

ஆரூரர் அந்தமும் ஆதியுமான பெருமானை அவ்வளவோடு விட்டாரா?

திருஓணகாந்தன்தளியில் எழுந்தருளியிருக்கும் பெருமானிடத்தில் கேட்கின்றார். ஆபத்துக் காலத்தில் உம்மை ஒற்றி வைத்துச் சாப்பிடலாமோ?

"அற்ற போழ்தும் அலந்த போழ்தும்
ஆபற் காலத் தடிகேள் உம்மை
ஒற்றி வைத்திங் குண்ண லாமோ
ஓண காந்தன் தளியு ளீரே"

வல்லமையாய்ச் சொல்லி உம்மைப் புகழ்ந்தாலும் வாய்திறந்து ஒன்று இல்லை என்று சொல்லமாட்டீர். இருக்கிறது என்று சொல்லவும் மாட்டீர். எங்களை ஆள்வதற்கு இருப்பது ஏன் நீர்?

"வல்ல தெல்லாம் சொல்லி உம்மை
வாழ்த்தி னாலும் வாய்தி றந்தொன்
றில்லை என்னீர் உண்டும் என்னீர்
எம்மை ஆள்வான் இருப்ப தென்னீர்"

சுந்தரர் திருவொற்றியூர் பெருமானை பேசுகின்றார் "மகத்திற் புக்கதோர் சனிஎனக் கானாய்"

இவ்வாறு நகைச்சுவை இழையோட நவிலப்பெற்றது ஏழாந்திருமுறை. அன்பின் முதிர்ச்சியாலும் பழுத்த பத்தித் கனிவாலும் விளைந்த சுந்தரர் தேவாரம் ஓத ஓத மேலும் ஓத வேண்டும் என்னும் உள்ளுணர்வைப் பெருக்குவது. கடவுளோடு தமது குறைகளை முறையிட முனைவோருக்கு வழிகாட்டலாக விளங்குவது. வாழ்க ஏழாந்திருமுறை.

சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம் என்பதை விடச் சுந்தரத்தமிழ் என்று ஏத்திப் போற்றுவது பொருத்தமானதே.

சைவத்திரு சிவ. சண்முகவடிவேல் எழுதும் "**சூரன் ஆணை**" நாடகம் அருள்ஒளியில் இரண்டு பகுதியாக வெளிவரும் என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தே விளையும் கள்

திரு. க. சிவசங்கரநாதன் அவர்கள்
சரசாலை

இவ்வுலகம் பரந்து விரிந்து கிடக்கின்றது. இதைப் போன்ற இன்னும் இரண்டு அண்டங்களும் உள்ளன என்று ஆன்றோர் கூறியுள்ளனர். இந்த மூன்று உலகங்களிலும் என்றும் உள்ளதாகிய பொருளையே அவர்கள் தேடினர். அவர்கள் தேடிய அப்பொருள் அவ்வுலகங்களிலும் அவற்றிற்கு அப்பாலும் இருப்பதாய் அவர்கள் கண்டனர். ஆம் அந்தப் பரம்பொருள் உள்ளேயும் புறம்பேயும் வியாபித்து இருப்பதை உணர்ந்தனர். கண்முன்னே தோற்றப்படும் இவ்வுலகப் பொருட்கள் அனைத்திலும் அப்பொருளின் தத்துவம் வேருன்றியிருந்தாலும் அது புறம்பே உள்ளது தான் என்றும் எண்ணினர் எப்படி எண்ணினாலும் அப்படி உணரப்படுவதற்கு அது இடந்தருவதையும் கண்டு வியந்தனர்.

அப்பொருளை உள்ளத்திலே நினைக்குத் தோறும் அடியார்களுக்கு மகிழ்ச்சி உண்டாகிறது சாதாரண மகிழ்வன்று. கள்ளைக்குடித்ததினாலேற்படக்கூடிய மாதிரியில் ஆனந்த வெறியே ஏற்படுகிறது. அந்த ஆனந்தத்தில் அவர்கள் பிறவற்றையெல்லாம் மறந்து அப்பொருளின் இன்பத்திலேயே கலந்து மகிழ்கிறார்கள். பெறுதற்கரிய அப்பேரானந்தம் அடியார்கள் உள்ளத்தே முற்றி விளைந்த ஒன்றாகும். ஆம் ஆனந்தம் ஏற்பட உள்ளம் முற்றி விளையவேண்டும் உள்ளத்தெளிவே அதனுடைய விளைவுமாகும். எல்லோருக்கும் உள்ளம் தெளியாது அடியார்கள் தான் அத்தெளிவை பெறுவர் குழம்பிய நீரைத்தெளிய வைக்காமல் குடிக்கக் கூடாது இவ்வுலகம் பிரச்சினைகளால் குழம்பிக்கிடக்கிறது. அக்குழப்பம் இறைவனைச் சிந்தனையில் நிறுத்தும் அடியார்களுக்கு எளிதில் தெளிந்து விடுகிறது. அத்தெளிவே ஞானமாகும். தெளிவு வேண்டும் என்ற எண்ணமே கூடதெளிவுக்கு வழிவகுத்துக் கொடுக்கும் குழப்பம் நீங்கிய நிலையில் எஞ்சியிருப்பது எதுவோ அதுவே தெளிவு. உள்ளம் தெளிந்தால் உலகம் தெளியும் தெளிந்த உலகம் தெய்வ சந்நிதியன்றோ? தெளிவைத் தவிர வேறு எதையும் தெய்வ சந்நிதியில் வேண்டமுடியாது ஏனென்றால் வேறு எதுவும் அங்கு கிடைக்காது. உலக சம்பந்தம் உள்ள வரையில் கூட்டம் வேண்டியது தான் எத்தகைய கூட்டம் நமக்குத்தேவை? அன்பர்களுடைய கூட்டம் வேண்டும் அன்பர்கள் எனப்படுவோர் தெளிவை வேண்டும் இறைவனது அடியார்கள் தாம். வேறு கூட்டத்தைச் சார்வோர் சேற்றையே பூசிக்கொள்வர்.

எதையும் வேண்டுவது மனமே அம்மனத்தில் இறைவனுடைய திருக்கோலமே அன்பர்களுடையதாயிருக்கும் எனவே அவ்வன்பர்களுடைய கூட்டத்தையே நாம் கொள்ளவேண்டும். சமயமே அன்பர்களை நம்மோடு சேர்ப்பிக்கும் நமது சமயத்தில் இல்லாதது பரசமயத்தில் இல்லை முற்றிலும் பரத்தை அதாவது பரம்பொருளைக் காட்டுவது நமது சைவசமயம். சமய ஈடுபாட்டினால் சத்சங்கம் கிடைக்கிறது சத்சங்கத்தினால் சமயஞானமும் வஸ்து விஷேடமும் ஏற்படுகின்றன பூரண விவேகத்தினால் அடையவேண்டியதாகியது தெளிவு கிடைக்கிறது உள்ளத்தே விளையும் கள்ளே ஆனந்தம் அதுவே தெளிவு. அத்தெளிவை விரும்பிய அடியார்களில் ஒருவர் அபிராமிப்பட்டர் அம்பிகையை வழிபட்டவர் அதாவது பரம்பொருளை அம்மையின் உருவத்திலே கண்டவர் அவர் உள்ளம் உருகி அம்பிகையாகிய அபிராமியிடம் பின்வருமாறு பாடுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கொள்ளேன் மனத்தில் நின்கோலமல்லா அன்பர் கூட்டத்தன்னை
விள்ளேன் பரசமயம் விரும்பேன்விரான் மூவுலகுக்
குள்ளே யனைத்தினுக்கும் புறம்பேயுள்ளத்தே விளைந்த
கள்ளே களிக்குங் களியே யளியவென் கண்மணியே"

மூன்று உலகங்களுக்குள்ளும் உள்ள பொருளே நீ எப்பொருட்கும் புறம்பே உள்ளனை. உன்னைத் தேடும் அன்பர்களுடைய உள்ளத்தே முற்றி விளைந்த இன்பமாகிய கள் நீ. இக்கள்ளினால் கிடைக்கும் மகிழ்ச்சியானதும் நீயே. உன்னை என் மனத்தின் கண் கொண்டு வரும் போது வேறு சமயம் எதையும் நான் விரும்பேன் நின் திருக்கோலத்தை மனத்தில் கொள்ளாத அன்பர்களுடைய சேர்க்கையை நான் கொள்ளமாட்டேன் என்று கூறுகிறார்.

இம்மாதிரி அடியார்களுடைய உள்ளத்திலே விளையும் கள் வெறியையூட்டாது நெறியையே ஊட்டும் போதையைத் தராது போதத்தையே தரும் கலப்பற்ற இன்பத்தை தடையற்ற ஆனந்தத்தைக் கொடுக்கும். அடியார் உள்ளத்தில் விளையும் அக்கள் நமது உள்ளத்திலும் சுரக்கட்டும் வெறியற்ற நெறியைக் காட்டட்டும்.

அருள் விருந்து

துக்கம் தீய செயலினின்று தோன்றுகிறது
மனதை அழுக்குப் படுத்துவது பொருந்தாத ஆசை.
மனதை வேண்டியவாறு மாற்றியமைக்க வல்லது எண்ணம்
ஆத்மா அழிவற்றது, அங்ஙனம் தூய அன்பும் அழிவற்றது
மானுடவர்க்கம் முழுதும் ஒரே பொருளின் பல்வேறு தோற்றங்களாம்.

உடல்,
உள்ளம்,
உயிர்

ஆகிய மும்மூர்த்திகளால் ஆக்கப்பெற்றது நமது அமைப்பு.

தனது கருவி கரணங்களை வெல்லுவது மனிதன் அடையும் வெற்றிகளிலெல்லாம் பெரிய வெற்றி.

தக்ஷிணாமூர்த்தி செய்வது போன்று இயற்கையும் மனிதனுக்கு மௌனோபதேசம் செய்து வருகிறது.

பரத்தினை அடைய முயலாதவன் மானுடனாகப் பிறந்தும் அப்பிறப்பை நன்கு பயன் படுத்தியவன் ஆகான்.

எல்லா உள்ளத்திலும் இறைவன் இருக்கிறார். அதை உணர்ந்து கொள்ளாதவர் பிறரை வெறுக்கின்றனர்.

உற்றார் உறவினர்க்குப் பணிவிடை செய்ய இயலாதவர்கள் தெய்வத்துக்குத் தொண்டுபுரிந்து ஆராதிக்கவும் இயலாதவர்கள் ஆவார்கள்.

படகு நீரின் மீது மிதக்கலாம். ஆனால் படகுக்குள் நீர் நுழைந்து விடலாகாது. ஆத்மசாதகன் உலகில் வாழலாம். ஆனால் உலகப் பற்று அவன் உள்ளத்தினுள் நுழைந்து விடலாகாது.

உடல் உணர்ச்சியில் ஊறியிருப்பவன்
'நான் பிரம்ம சொரூபம்' என்றோ
'நான் சிவ சொரூபம்' என்றோ சொல்லலாகாது.
அது அகங்காரத்தை வளர்க்கும் உடல் உணர்வைக் கடந்தவன் அங்ஙனம் சொல்லலாம்.

தர்ம சக்கரம்; சக்கரம்-8; விகாரி ஆனி மீ; ஆரம்-6; பக்கம்: 202; அருள்விருந்து; 1959ஆம் ஆண்டு; ஆசிரியர்: சுவாமி சித்பவானந்தர்; ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் (ராமகிருஷ்ணமிஷன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விப்ரசிகாமணி

பேரறிஞர் முருகவே. பரமநாதன் அவர்கள்

நவமணி என்றால் ஒன்பது இரத்தினங்கள், மணிமாலை என்றால் இரத்தினத்தாற் செய்த மாலை. பவளமாலை முத்துமாலை, இரத்தினமாலை கழுத்தணிகள். ஹாரம் ஆரமாகிய மாலையைக் குறிக்கும். துளசி மணிமாலை, உருத்திராட்ச மாலை சமயத்தோடு தொடர்புடையது. சந்தனமரத்தைக் கடைந்து மணியாக்கிமாலை செய்வர். பூவாற் செய்வது பூமாலை பாவாற் செய்வது பாமாலை இரட்டை மணிமாலை (இருவித பாக்களால் ஆனது) மும்மணிமாலை (மூன்றுவகையான் செய்யுட்களால் ஆனது) நான்மணிமாலை (நான்கு வகைப் பாடல்கள் அமைந்தது) என்பன சைவசமயம் சார்ந்த பக்தி இலக்கிய வரிசைகள். இவ்வகையிலே மன்னர் முடிகளில் விலை உயர்ந்த இரத்தினங்கள் பதிக்கப்பட்டிருக்கும். அதில் தலைசிறந்த மணிக்கு முடிமணி, சிகைமணியென்றும் பெயர். வித்துவான்களில் உயர்ந்தவரை வித்துவசிரோமணி என்பர். (சிரம்-தலை) (வித்துசிரோமணி பொன்னம்பலபிள்ளை) பண்டிதமணியென்ற திருநாமம் கலாநிதி சி. கணபதிப்பிள்ளைக்கே உரித்தான தனித்துவம் நிறைந்த பட்டம். இந்நோக்கிலே பல வழக்காறுகள் தமிழில் நிறைய உண்டு.

பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான தொண்டர் அடிப்பொடி ஆழ்வாருக்குப் பொற்றோர் வைத்த திருநாமம் விப்ரநாராயணர். இ.ஃதே போலப் பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகளை (இறைவன் உணர்த்த)த் திருவாய் மலர்ந்தருளியவர் திருஞானசம்பந்தப் பெருந்தகை. இவர்களைப்பற்றி சுந்தரர் திருத்தொண்டத் தொகையிற் பாடினார்.

வம்பறா வரிவண்டு மணநாறா மலரு
மதுமலர்நற் கொன்றையா னடியலாற்பேணா
வெம்பிரான் சம்பந்த னடியார்க்கு மடியேன்

திருத்தொண்டத்தொகை 5

திருத்தொண்டத்தொகையை வகை செய்து திருத்தொண்டர் திருவந்தாதி பாடியவர் நம்பியாண்டார் நம்பி. (பாடல் எண். 33, 34 திருஞானசம்பந்தர் பற்றி வருவன) இதை விரித்துப் பாடியதே பெரிய புராணம் முதனூல், சார்புநூல், வழிநூல் என்று இவை பேசப்படும் நம்பியாண்டார் நம்பி அருளிய நூல்கள் பத்து. அவற்றின் ஆறு பக்திப் பனுவல்கள் திருஞானசம்பந்தரைப் பற்றியே அமைந்துள்ளன. அவை:

1. ஆளுடை பிள்ளையார் திருவந்தாதி
2. ஆளுடை பிள்ளையார் திருச்சண்பை விருத்தம்
3. ஆளுடை பிள்ளையார் திருமும்மணிக்கோவை
4. ஆளுடை பிள்ளையார் திருத்தொகை
5. ஆளுடை பிள்ளையார் திருவுலாமாலை
6. ஆளுடை பிள்ளையார் திருக்கலம்பகம்

காலத்துக்குக்காலம் சம்பந்தர் மேல் பாடிய பிரபந்தங்கள் பல எழுந்துள்ளன. திருத்தொண்டர் புராணம் எனப்படும் பெரியபுராணம் வடித்தவர் தெய்வச் சேக்கிழார் தேசீயநூல், சைவவரலாற்று நூலெனக்கணிக்கப்படும். இப்பிரபந்தத்திலே பிள்ளையார் வரலாறு முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது. எனவே பிள்ளை பாதிபுராணம் பாதி என்ற வழக்காறு வந்தது. சேக்கிழாரால் பரசமய கோளரியெனப் பேசப்படும் சீகாழிப்பிள்ளையின் அவதாரம் சுமார் ஆறாம் நூற்றாண்டில் பெரிய தாக்கத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தியது. அப்பரும் சம்பந்தரும் சமகாலத்தவர்கள். மன்னனெவ்வழி குடிகளுமவ்வழி என்ற கோதாவில் பல்லவமன்னர் பலர் சமண சமயிகளாய் இருந்தனர். ஏன் கூன்பாண்டியனுமே அச்சமயவழி நின்றவன் தான். இந்தச் சமய ஊடுருவலைத் தடுத்து நிறுத்தியவர்களில் முன்னிடம் வகிப்பவர் ஞானசம்பந்தர். பௌத்தமும் சமணமும் சைவத்தை விழுங்காமல் கல்லணை கட்டியவர் இவர். இவரின் மூன்று திருமுறைகளிலும் வரும் பதிகந்தோறும் சமணர் பௌத்தர் பற்றி வருவதே இதற்குச் சான்று. பதிகத்தின் ஈற்றிலமைந்த திருக்கடைக்காப்பு (பல்ச்ருதி - பதிகப்பயன்) பேசும் முத்திரைக்கவிதைகள் பலவற்றில் தமிழ் விரகர், தமிழாகரர் என்ற தொடர்கள். அவரின் தரவுகளே இப்படிப் பல திருநாமங்கள் ஆளுடையபிள்ளையாரையே குறிப்பன.

சண்பைநகராளி, கவுணியர்கோன், சண்பையர்கோன், பரசமயகோளரி, அருகாசனி, தமிழாகரன், தமிழ்விரகன் சைவசிகாமணி விப்ரசிகாமணி, காழியர் கொற்றவன், காழி நாதன், இன்கவி, தமிழின் தொகை செய்தவன். தமிழ்க்கடல் என்பன நம்பியாண்டார் தரும் பிரபந்தங்களிலே பயின்றுவரும் திருநாமங்கள். இப்பிரயோகங்கள் வரும் செய்யுட்களை இங்கே தர இடம்பிடிக்கும் என்பதற்காக மேற்கொள்ளவில்லை. வாசகர்கள் பதினோராந் திருமுறையின் ஈற்றிலேயமைந்த நம்பியின் பிரபந்தங்கள் மூலம் அறியவும் இவற்றிலே என் சிந்தனையை அருட்டும் இருதிருப்பெயர்களான விப்ரசிகாமணி சைவசிகாமணி பற்றிக் கவனிப்போம்.

மொழிவகுசைவசிகாமணி மூரித்தடவரைத்தோள்
தொழுவது மற்றவன் தூமலர்ப்பாதங்கள்

ஆளுடைபிள்ளையார் திருவந்தாதி 11

தனமே தருபுகழ்ச் சைவசிகாமணி தன் அருள்போல்

மேலது 78

மங்கை யிடத்தர னைக்கவி நீரெதிர்
ஓட மதித்தருள் செய்
தங்கு புகழ்ச்சதுர் மாமறை நாவளர்
சைவசிகாமணிதன் ஆளுடைபிள்ளையார் திருக்கலம்பகம் 15

சிகாமணி என்பதற்கு முன்னரே ஓரளவு விளக்கம் தரப்பட்டுள்ளது. இறைவனே சைவன் என்றழைக்கப்படுகிறார். திருவாசகச் செம்மல் வாதவூரர். அவரே இறைவனை இந்து சிகாமணி எனப் பாடியுள்ளார். இந்து சந்திரன் சந்திரனைச்சிகையில் (சடாமுடியில்) சூடியசிவன் சந்திரசேகரன், பிறைசூடி-சந்திரசூடன், சந்திரமௌலி எனப்பேர்பெற்றான். அவன் அணிந்துளது இளம்பிறை. எனவே இளம்பிறையாளன் எனப் பாடியவரும் புகலியர் கோனே. (சிறையாரும் மடக்கிளியே எனத் தொடங்கும் பாடலில்)

இந்து சிகாமணி எங்களை
ஆள எழுந்தருளப் பெறிலே

திருவாசகம் திருப்படையாட்சி 7

இனி விப்ரசிகாமணி வரும் பாடல்கள் வருமாறு.

வகைதகு முத்தமி ழாகரன் மறைபயில் திப்பியவாசகன்
வலகலை வித்தகன் வானவில் மதியனை பொற்குவை மாளிகை
திகைதிகை மட்டலர்வார் பொழில் திகழ்புக லிக்கரசாகிய
திருவளர் விப்ரசி காமணி செழுமல யத்தமிழ் கேசரி

ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகம் 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனமு கத்தவ புத்தரை இந்திர
சித்துமணம் புணர் வுற்றான்
ஈழவ னார் சொரிதொட்டி யினங்களை
வெட்டி யிசித்தனர் பட்டர்
தானம் இரக்கிற் சீதை மடுப்பது
சாதி குடத் தொடு கண்டீர்
சக்கர வர்த்திகன் சிக்கர மட்டுவர்
தத்துவ மிப்பரி சுண்டே
ஆன புகழ்ப்பயில் விப்ர சிகாமணி
அத்தகு மைப்புரை யுங்கள் மேலது 11

சைவம் சிவசம்பந்தமானது சிவசம்பந்தம் உடையவர்கள் சைவ சமயிகள். எனவே முழுமுதற் பொருளான சிவனை வழிபடுவோரின் சமயம் சைவசமயமே. சைவசமயிகள் இந்து சமயத்தினர் அன்று.

"தெய்வம் சிவமே; சிவனருள் சமயம்
சைவம், சிவத்தொடு சம்பந்தம் என்றான்"

சிற்றப்பலநாடிகள்

"சிவா-கல், கல்லின் தொடர்புடையது சைலம், திலத்தின் தொடர்புடையது தைலம்; இதேபோல் சிவசம்பந்தம் உடையது சைவம் எனவுணர்க"

கிருபானந்தவாரியார் கந்தரநுபூதி 4ம்பக்கம்

சிவனொபொக் குந்தெய்வந் தேடினும் இல்லை
அவனொடொப் பார்இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரையானே திருமந்திரம்-5

இவ்வண்ணம் சைவத்தையும், சிவத்தையும் மேலாக மதித்து, அதற்கேற்பட்ட இடைஞ்சலை நீக்கித் தென்னாட்டிலேற்பட்ட பரசமய ஊடுருவலை எதிர்த்துப் போராடி சைவத்தை நிலைநாட்டிய ஞானசம்பந்தரை சைவசிகாமணியென்கிறார் நம்பி. அடுத்து விப்ரசிகாமணி பற்றியாராய்வோம் பிள்ளையார் புராணத்திலே இப்பிரயோகம் வருகிறது.

வேண்டிநற் றவமி யற்றி
வீப்பிரன் வருந்துநாளிற்

பிள்ளையார் புராணம் பாட்டு 2

வீடைகொடு கவுரியந்த
வீப்பிரன் மனையா மன்னம்
பெடை வயிற்றுதித்து மேலது-7

விப்பிரன்-பிராமணன், அந்தணன்
விப்பிரர்-பிராமணர், அந்தணர்
ஞானசம்பந்தப்பெருமான் கௌணியர்குலப் பிராமண குலத்தவர் எனவே விப்ரன்-அந்தணர், சிகாமணி-முடிமணி போன்றவர்.

அந்தணர் குலதிலகனாய்; அந்தணர் குலச்சிரோமணியாய் விளங்கிய அவரை விப்ரசிகாமணியென்றார் நம்பியாண்டார் நம்பி வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க அவதாரம் செய்த திருஞானசம்பந்தர் முருகனது அவதாரம் எனக்காஞ்சிப்பெரியவர் கூறுவர். அவருக்குப்பல ஆண்டுகள் முன் வாழ்ந்த அருணகிரியார் கந்தரந்தாதியிலும் திருப்புகழ் பலவற்றிலும் இந்த உண்மையை எடுத்துக்கூறி இருக்கிறார். ஓர் திருப்புகழில் விப்ரர் என்ற பிரயோகம் என்ற தொடர் வரக்காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீப்ரச முக வேதன பச்சிமபூமிகாவல
வெட்சியு நீப மாலையு மணிவோனே
மெத்திய ஆழி சேறெழ வெற்பொடு சூரனீறெழ
விக்ரம வேலை யேவிய பெருமாளே

திருப்புகழ் 1108 (அம்படியேழு)

திருப்புகழ் சிலவற்றில் வரும் திருஞானசம்பந்தர் தொடர்பான இடங்கள் சிலவை இனிப்பார்ப்போம்.

எழுகுநிறை நாபி அரிபிரமர் சோதி
இலகுமரன் மூவர் முதலானோர்
இறைவி யெனுமாதி பரைமுலையினூறு
மெழுமமிர்த நாறு கனிவாயா
புழுகொழுகு காணி கவுணியரில் ஞான
புனிதனென ஏடு தமிழாலே
புனிலிலெதி ரேற சமணர்க்கு கழுவேற
பொருதகவி வீர குருநாதா

திருப்புகழ் 32

திகுதிகென மண்டவீட்ட தீயொரு
செழியனுடவ் சென்று பற்றி யாருகர்
திசையின மண்வந்து வீட்ட போதினு மமையாது
சிறியகர பங்கயத்து நீனொரு
தினையளவு சென்று பட்டபோதினில்
தெளியகினி வென்றிவீட்ட மோழைகள் கழுவேற

திருப்புகழ் 181

இவ்வரலாறு பல திருப்புகழ்களிலே நிறைந்து கிடக்கக் காணலாம். சம்பந்தரின் பெற்றோர் இறைவனிடம் இரந்து வேண்டியதற்கமையவே திருஞானசம்பந்தர் முருக அவதாரம் எனச்சீகாழிப்புராணம் செப்பும்.

ஞானசம்பந்தப் பெருமான் சிவனருளால் செய்தருளிய அற்புத சம்பவங்களை திருமும்மணிக்கோவையில் (நம்பி) சிறப்பாகப் போற்றுகின்றார்.

அடுசினக்கடகரி யதுபவ வுரித்த
படர்சடைக்கடவுள் தன் திருளருளதால் பிறந்தது
கழுமல மெனுங் கடிநகரதுவே வளர்ந்தது
தேங்கமழ் வாவிச்சிலம்பரையன்பெறு
பூங்குழல் மாதிடுபோனகம் உண்டேபெற்றது
குழகனைப் பாடிக்கோலக்காப்புக்
கழகுடைச் செம்பொற்றாளம் வையே தீர்த்தது
தாதமர் மருகற் சடையானைப் பாடிப்
பேதுறு பெண்ணின் கணவனைவிடமே அடைத்தது
அரைசோ டிசையா அணிமறைக்காட்டுக்
குரைசேர் குடுமிக் கொரு மணிக்கதவே ஏறிற்று
அத்தியும் மாவும் தவிர அரத்துறை
முத்தின் சிவிகை முன்னாட் பெற்றே பாடிற்று
அருமறை ஒத்தூர் ஆண்பனையதனைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருநிறம் எய்தும் பெண்பனையாவே கொண்டது
பூவிடுமதுவிற் பொறி வண்டுழலும்
ஆவடு துறையிற் பொன்னாயிரம் கண்டது
உறியொடு பீலி ஒருகையிற் கொள்ளும்
பறிதலைச் சமணைப் பவ்கழு மிசையேநீத்தது
அவிழ்ச்சுவை யேயறிந்தரனடி பரவுந்
தமிழ்ச்சுவை அறியாத் தம்பங்கணையே நினைத்தது
அள்ளற்பழநக் கொள்ளம் புத்தூர்
இக்கரையோடம் அக்கரைச் செலவே மிக்கவர்
ஊன சம்பந்தம் அனுத்துயக் கொளவல
ஞான சம்பந்தன் இஞ்ஞாலத்திடையே

ஆளுடைபிள்ளையார் திருமணிக்கோவை 4-1-25

இவ்வாறு சைவமும் தமிழும் காத்து ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்கிய ஞானசம்பந்தர் ஒரு பரசமய கோளரிமட்டுமன்றி சைவசிகாமணியும், விப்ரசிகாமணியுமாம். இன்று நம் தேசத்தின் பிறசமய ஊடுருவல் நாவலர் காலத்திலும் பார்க்கச் சதமடங்கு விரைவு படுத்தப்பட்டிருக்கிறது. பசும்பதாகை காட்டி நிற்கின்ற நிலைமாற வேண்டும். வாழ்க சைவம் வளர்க தமிழ்

அருள்விருந்து

மனதை அடக்கியாளுதற்கு அறிகுறியா யிருப்பது நாவடக்கம்
சத்தியமே பேசுதல் ஆயிரம் அசுவமேத யாகத்தைவிட மேலானது
பதவியில் மோகம் கொள்ளாதவனை உலகம் அடிபணிந்து வணங்குகிறது
சாந்தத்தில் உறுதி பெற்றிருப்பவர்கள் மற்றவர்களையும் சாந்த மூர்த்திகளாக்குகின்றனர்.
ஜனக்கூட்டத்துக்கு இடையில் ஏகாந்தத்தை உணர்பவன் மனபரிபாகம் அடைந்தவன் ஆகிறான்
மனிதனுடைய சிந்தை,
சொல்,
செயல்
ஆகிய மூன்றையும் கடவுள் ஓயாது கண்காணித்து வருகிறார்
பற்றற்றிருப்பது எல்லார்க்கும் சாத்தியமல்ல, வலிவு படைத்திருப்பவனே பற்றற்றிருக்க வல்லவனாகிறான்.
இயற்கையில் உள்ளதெல்லாம் மனிதனிடத்து இருக்கிறது;
மேலும் மனிதனுக்கு தனி மகிமையும் ஒன்று உண்டு.
உயர்ந்தவை தாழ்ந்தவை என்பன இயற்கையில் இல்லை.
அந்த வேற்றுமை மனிதனுடைய கற்பனையில் இருக்கிறது.
நலத்தையே நினைந்து, நலத்தையே நவின்று, நலத்தையே நிறைவேற்றி வருபவனுக்கு யாரும் தீங்கு செய்யமாட்டார்கள்.
ஒரு தனிமனிதனிடத்து அச்சம் இருக்குமாகில் அவனிடத்து ஏதோ குறைபாடு இருக்கிறது என்று அதனின்று வெளியாகிறது.
தன்னை முக்த புருஷனாகக் கருதுபவன் முக்தியடைகிறான்.
தன்னைப் பந்தத்தில் இருப்பவனாகக் கருதுபவன் பந்தத்துக்க உட்படுகிறான்.

[தர்மசக்கரம்; சக்கரம் 8; விளம்பி மாசி மீ : ஆரம் 2; பக்கம்: 42. ஆசிரியர்: சுவாமி சித்பவானந்தர்; ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம். (ராமகிருஷ்ணமிஷன்).]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் விருந்து

நாமும் வணங்குவோம்

அருட்சகோதரி ஜதீஸ்வரி அவர்கள்

அன்பான பிள்ளைகளே! அன்பு வாழ்த்து!

நலமாக இருக்கிறீர்களா? நன்கு படிக்கிறீர்களா? சரி. இப்போதெல்லாம் நம்மைச்சூழ உள்ள இயற்கையைப் பற்றியும் அதனை நாம் மதிக்கவேண்டும் என்பது பற்றியும் எல்லோரும் பேசுகிறார்கள். சிந்திக்கிறார்கள். நீங்களும் கேட்டிருப்பீர்கள் ஆமாம்! நம்மைச் சூழ உள்ள இயற்கை என்ற இந்த உலகமும் அதைச் சூழ உள்ள அண்ட வெளியும் மிக அற்புதமானது. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற பஞ்ச பூதங்களால் ஆன இந்த இயற்கை நமக்கெல்லாம் தாய், தந்தை, குரு, தெய்வம் எல்லாமாக இருக்கிறது நாம் இதனை நேசித்து, அநுபவித்து, வணங்கி வாழவேண்டும்.

இதுபற்றி மிக நயமான சின்னக்கதை ஒன்று சொல்லட்டுமா?

சுவாமி விவேகானந்தரைப்பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் தலைமைச் சீடர் இவர். இவருடன் இன்னும் பதினொரு பேர் இராமகிருஷ்ணருக்குச் சீடர்களாக இருந்தவர்கள் அவர்களில் ஒருவர் ஸ்ரீ அற்புதானந்தர் என்பவர். இவரைப்பற்றிய செய்தி தான் இப்போ சொல்லப்போகிறேன்.

ஸ்ரீ இராமகிருஷ்ணர் கல்கத்தா காளிகோயில் சூழலில் இருந்த காலம் அது. இளைஞர் பலர் அவரிடம் வந்து தெய்வீக வாழ்க்கையைக் கற்றுக் கொண்டிருந்தனர்.

நரேந்திரர், ராக்கால், சசி என்று..... நன்கு படித்த இளைஞர்கள் அவர்கள்.

அக்காலத்தில் அயலில் வசித்த ஒரு பிரபு தமது வீட்டில் வேலைக்காரனாக இருந்த ஒரு சிறுவனிடம் ஸ்ரீ இராமகிருஷ்ணருக்குப் பழங்கள் காய்கறிகள் போன்ற காணிக்கைப் பொருட்களைக் கொடுத்து அனுப்புவது வழக்கம். நேர்மையும், பணிவும், அன்பும் உருவான அந்தச் சிறுவனின் பெயர் லாட்டு. அவன் கல்வி அறிவு பெற்றிருக்கவில்லை. என்றாலும், விவேகமும், துணிவும் அவனிடம் இருந்தன. சீலம் நிறைந்த அந்தச் சிறுவனிடம் ஸ்ரீஇராமகிருஷ்ணர் மிகவும் அன்பு கொண்டார். அவனைத் தம்முடனேயே வைத்துக்கொள்ள விரும்பினார். லாட்டுவும் பரமஹம்ஸருடன் தங்கி, அவருக்கு இரவும் பகலும் தொண்டு செய்ய ஆசைப்பட்டான். நாளடைவில் பரமஹம்ஸர் அந்தப் பிரபுவிடம் அநுமதி பெற்றுச் சிறுவன் லாட்டுவை தம்மோடேயே தங்கவைத்துக் கொண்டார்.

லாட்டுவும் மனம் ஒன்றி குருவுக்குப் பணிவிடைசெய்வதுடன், குருவும்; அவரிடம் வரும் பலரும் உரையாடும் தெய்வீகக் கதைகளைக் கேட்டும், குருதேவர் கூறும் உபதேசங்களைக் கடைப்பிடித்தும் நல்லபடி மனப்பக்குவம் பெற்று வந்தான். தூய உணவும், நல்ல யோகப்பயிற்சிகளும் ஏனைய சீடர்களுக்கு நிகராக லாட்டுவையும் சீர்மை பெறச் செய்தன. ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் நேர் சீடர்கள் பன்னிருவரில் லாட்டுவும் ஒருவரானார்.

ஸ்ரீ குருதேவரின் பரிபூர்ணத்துவத்தின் பின் அந்தப் பன்னிரு இளைஞர்களும் நரேந்திரர் தலைமையில் துறவுபூண்டு சாதனைகளும், தொண்டும் புரியத்தொடங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரேந்திரர் சுவாமி விவேகானந்தர் ஆனார். ராக்கால் சுவாமி பிரம்மானந்தர் ஆனார். சசி ஸ்ரீஇராமகிருஷ்ணானந்தர் சரத் சாரதானந்தர் என்று எல்லோரும் துறவு நாமமும் பெற்றனர். லாட்டுவுக்கு சுவாமி அற்புதானந்தர் என்று துறவுப் பெயர் சூட்டப்பட்டது.

சிறுவயதில் எழுத்தறிவோ, பள்ளிப்படிப்போ பெற்றிராத லாட்டு, குருவின் முன்னிலையில் தெய்வீகப் பயிற்சிகளின் மூலம் அரியபல யோகசித்திகளைப் பெற்றவராயிருந்தார். எனவே; சுவாமி விவேகானந்தர் சுவாமி அற்புதானந்தர் என்ற பெயரையே சூட்டினார்.

சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவுக்குச் சென்று சர்வமத மகாநாட்டில் பங்குபற்றி, அங்கே மிகவும் புகழ்பெற்று, இங்கிலாந்து சென்று அங்கும் தமது ஞான உரைகளால் உயர் மதிப்பைப் பெற்று தாய்நாடு திரும்பினார். கல்கத்தாவின் அருகில் எல்லாச் சீடர்களும் தங்கியிருந்த மடத்தில் சுவாமிஜி வந்து சேர்ந்து கொண்டார். எல்லாருக்கும் ஒரே மகிழ்ச்சி சுவாமிஜியைச் சுற்றி இருந்து கொண்டு அவரது மேல்நாட்டு யாத்திரை அநுபவங்களையும், மேல்நாட்டு மக்களின் கல்வி, கலாசாரம், அவர்களின் கல்வி, நாகரிகமேம்பாடு என்பன பற்றியும் சுவையான கேள்வி பதில்களுடன் உரையாடல் நடந்து கொண்டிருந்தது.

மேல்நாட்டினரின் செல்வச் செழிப்பு, விஞ்ஞான முன்னேற்றம், சமய அறிவுபற்றி விரிவாகப் பேசிக்கொண்டிருந்தவர்களிடையே சுவாமி அற்புதானந்தரும் வந்து அமர்ந்திருந்தார்.

அவர் இவர்களுடைய உரையாடல்களை எல்லாம் கேட்டுவிட்டுச் சுவாமி விவேகானந்தரிடம் ஒரு கேள்வி கேட்டார்.

"ஏன் நரேன்? அந்த நாடுகளில் சூரிய சந்திர மண்டலங்களை ஆராய்ச்சி செய்வதாகக் கூறுகிறார்களே..... அது சரி. ஆனால்; கண்கண்ட தெய்வமாகிய சூரிய பகவானை அவர்களும் கும்பிடுகிறார்களா?" சுவாமி விவேகானந்தர் "இல்லை" என்று தலையசைத்தார்.

"இல்லையா? உலகுக்கு ஒளி கொடுக்கிற, நமக்குக் கண்கண்ட தெய்வமாகிய சூரிய பகவானைக் கும்பிடாத, இயற்கையைத் தெய்வமாக வழிபடாத அந்த மனிதர்கள் வேறே என்ன முன்னேற்றம் கண்டும் என்ன பயன்? அவர்களைப்பற்றி பேசி மகிழ என்ன கிடக்கிறது போ!" என்று எழும்பிச் சென்றார் சுவாமி அற்புதானந்தர். ஏனையோர் மௌனமாகி, அமைதியாக இருந்தார்கள் அவர் கூறிச் சென்ற உண்மையைச் சிந்தித்தார்கள்.

இடப தானம்

வைதிகர்களும் சைவர்களும் ஏகோதிட்டத்தின் முன் பரமசிவனுக்கு நீல இடபம் விடுதலாகிய இடபோத்சரச்சனம் என்னும் கிரியை செய்க என்று காமிகாகமம் கூறும். மற்றுஞ் சிரார்த்தங்கள் அனைத்தும் செய்தாலும் சிவபெருமானைக் குறிக்கும் இடபம் விடாராயின் பிசாசுருவம் அகலாது.

சிரார்த்த தீபிகை

அச்சுவேலி சிவஸ்ரீ சு. குமாரசுவாமிக்குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொடர் - 24

கந்தபுராண சிறுவர் அமுதம்

- மாதுரஜி

66. ஞான உபதேசம்

ஐந்தொழில்களும் முறையாக நிகழ்வதன் பொருட்டு நடராசப்பெருமான் ஆடுகின்றார். இந்த ஆட்டத்தின் தொடக்கம் யாருக்கும் தெரியாது. இதுபோல இயல்பாக ஆதிலது மயில்தோகையை விரித்தாடும் தோகை விரியும் போது "ஓம்" என்ற பிரணவ வடிவத்தைக் காட்டி மயில் ஆடுகின்றது. பறவை இனம் எல்லாம் "கூ", மே, பே, என்றுதான் ஒலி எழுப்பும் ஆனால் சேவல் "கொக்கறு கோ" என்று கூவும். கொக்கு என்றால் மாமரம். கொக்கு-அறுகோ என்றால் மாமரத்தை அறுத்த தலைவன் என்று பொருள். மாமரமாக வந்த சூர வடிவத்தை வென்ற வீரமுருகனுக்குச் சேவல் போற்றி கூறும். சேவல், பிரணவத்தை நாத வடிவமாக ஒலிக்கிறது. மயில் விந்து வடிவத்திலும், சேவல் நாத வடிவத்திலும் இருக்கின்றன. வேல்-கலை. இவற்றுக்கெல்லாம் தலைவன் முருகப்பெருமானாவர்.

மயில் தோகை விரித்தாடுவது "ஓம்" என்ற எழுத்துருவம். சேவல் கூவுவது அருவம். இந்த இரண்டிற்கும் இடையில் கந்தவேள் இருக்கின்றார். ஒ ருவன்று, அருவன்று என முருகப்பெருமான் உணர்த்துகின்றார். மயில் இருண்ட மேகத்தைக் கண்டு மகிழ்ச்சி கொண்டு ஆடும். சேவல் சிவந்த சூரியனின் ஒளிகண்டு கூவும். இருள், ஒளி இரண்டிற்கும் இடையில் கந்தவேள் இருக்கின்றார் இதனை அருணகிரிநாதர் இருளன்று ஒளியன்று எனப்பாடுகின்றார்.

மயில் பச்சைநிறம். அதன் உடம்பு பச்சை கழுத்து நீல நிறம். சிவபெருமானுக்கு நீல கண்டன் என்று பெயர். சிவபெருமான் ஆலகாலவிடத்தை கண்டத்தில் அடக்கினார். மயிலும் விஷத்தை அடக்கும். மயிலை நினைப்பவர்களுக்கு விஷ பயம் இல்லை.

முருகப்பெருமான் அவதாரம் செய்தது சூரனை சம்ஹாரம் செய்ய அல்ல. இந்திரனின் மாங்கல்யத்தை காப்பாற்றுவதும். ஆகவே கந்தபுராண அமுதம் படிக்கும் பெண்கள் தீர்க்க சுமங்கலிகளாக இருப்பார்கள். சூரபன்மனுக்கு வேறு வடிவம் கொடுத்து இந்திரனின் ஒ பிணையும் காத்தவர் முருகப்பெருமான்.

தேவர்கள் எம்பெருமானை நோக்கி சுவாமி தாங்கள் வேற்றுமை பினால் சூரபன்மனைச் சம்ஹரிக்கவில்லை. தங்களை வணங்குகின்ற அடியேங்களது வினையின் வேரை அறுத்தீர்கள். இனி எங்கட்கு வேறோர் துறைபுண்டோ? அவுணர்கள் நூற்றெட்டு யுகங்களாக எங்களை நெருக்கினார்கள். உய்யும் வழியறியாது அலைந்தோம். எங்களைத் தாங்கள் உய்விக்க எழுந்தருளி காத்தருளினீர்கள். இனி வேதமும் உலகமும் உய்யும் காண்பானும் நாம் சிறிதொருதும் தாங்களென உணர்ந்து விட்டோம். இனி நாங்கள் தேவரீரின் திருவடிகளுக்குத் தொண்டு பூண்டோமெனத் தேவர்கள் துதித்தார்கள். முருகப்பெருமான் மகிழ்ந்து அவர்கள் விரும்பிய வரங்களை அளித்தார்.

போர்க்களத்தில் இறவாது தப்பிய அவுணர்கள் வீரமகேந்திரபுரிக்கு ஓடிச்சென்றார்கள். அரண்மனையில் இருந்த பதுமகோமளையிடம் சூரபன்மன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப்பெருமானின் வேற்படையால் இறந்துவிட்ட செய்தியைக் கூறினார்கள். இச்செய்தி காதில் விழமுன் இடியேறு கேட்ட நாகம்போல் நிலத்தில் வீழ்ந்தாள் பதுமகோமளை அந்த அளவில் உயிர் நீங்கியது அவளுக்கு. சூரபன்மனின் மற்றைய மனைவியர்கள் அலறினார்கள் தீ வளர்த்துப் பதுமகோமளையின் உடலை அதிலிட்டார்கள். தாமும் அத்தீயில் வீழ்ந்து இறந்தார்கள். சூரியன் மறைந்தான். அந்நகரத்தில் இதுவரை இருந்த மகாலட்சுமி நகரை விட்டு நீங்கினாள்.

சிறையில் வருந்திய சயந்தனையும், தேவர்களையும், வீரவாகுதேவர் முருகப்பெருமானின் பணிப்பின்படி சிறையிலிருந்து விடுவித்தார். அவர்கள் எல்லாரும் ஆனந்தம் கொண்டாடினார்கள். சயந்தன் பிதாவாகிய இந்திரனை வணங்கினான். இந்திரன் சயந்தனை தழுவி அணைத்தான்.

மீனாகக் கடலில் ஓடி ஒழிந்த இரணியன், தந்தை சூரபன்மன் இறந்த செய்தியை அறிந்து கவலைப்பட்டான். பின்னர் இராச குருவாகிய சுக்கிராச்சாரியரிடம் சென்றான். குருவின் ஆலோசனைப்படி தந்தையைத் தவிர்ந்த மற்றவர்களுக்கு நீர்க்கடன் செய்தான். தந்தை சூரபன்மன் முருகப்பெருமானுக்கு மயில் வாகனமாகவும், சேவற்கொடியாகவும் மாறியமையால் நீர்க்கடன் செய்யவில்லை. துன்பத்துக்கு வித்து ஆசை. அதனால் சிவபெருமானை நோக்கித் தவம் செய்ய இரணியன் சென்றான்.

இடும்பன், சூரபன்மனின் குரு. அவனுடைய மனைவி இடும்பி. இருவரும் கைலாயத்தில் தவம் செய்து கொண்டிருந்தனர். ஒரு முறை சிவபெருமான் அகத்தியரைத் தெற்கே சென்று தவம் இருக்கும்படி பணித்தார். தெற்கில் கைலாயத்திற்கு ஒப்பான மலை இல்லையென அகத்தியர் கவலைப்பட்டார். அப்போது சிவபெருமான் இடும்பனையும், இடும்பியையும் அழைத்தார். சிவசக்தி வடிவான மலையையும் சிவமலையையும் பெயர்த்துக் கொண்டு வாவென்று யோக தண்டத்தைக் கொடுத்தார். அவர்கள் அவ்விருமலைகளையும் யோகதண்டத்தால் பெயர்த்தனர். அஷ்ட நாகங்களால் பின்னிச் சக்தி மலையையும் சிவமலையையும் கட்டிக் கவடி போலக்கொண்டு போனார்கள். இடையில் வராககிரி என்னும் மலையில் (கோடைக்கானல்) மலையை இறக்கி வைத்தார்கள். களைப்பாறி உணவு சாப்பிட்ட பின் மலையை இடும்பன் தூக்கினான். ஆனால் மலை தூக்க முடியவில்லை. மேலே அண்ணாந்து இடும்பன் பார்த்தான். மலையில் சிறுவன் ஒருவன் உலாவினான். இடும்பனுக்குச் சிறுவன் மீது கோபம் வந்தது. சிறுவனுடன் இடும்பன் சண்டையிட்டார். சிறுவனாகிய முருகப்பெருமான் இடும்பனை எரித்தான். இடும்பி தாலிப்பிச்சை வேண்டினாள். முருகப்பெருமான் இடும்பனை, 'நீ மலைக்கு மத்தியில் இரு, என்னிடம் மலைக்கு வருகின்றவர்கள் முதலில் இடும்பனுக்குப் பூசைசெய்ய வேண்டும்.' என்றார். அதன் பின்னரே காவடி எடுக்கும் வழக்கம் ஏற்பட்டது.

சூரபன்மன் சமரில் அமரர் புறமிருந்து இறந்த பூதர்கள் அனைவரும் எழுந்து வருமாறு முருகப்பெருமான் திருவுளம் கொண்டார். அவ்வாறே பூதர்கள் உயிர்த்தெழுந்தார்கள். பின்னர் முருகப்பெருமான் வருணபகவானை அழைத்தார். நாம் இறங்கி இருந்த இலங்காபுரி தவிர்ந்த மற்றைய மகேந்திரபுரி முதலாக ஏழு தீவுகளையும் அழித்துவிடு எனப் பணித்தார். அவ்வாறே வருணபகவான் அழித்துவிட்டார்.

பின்னர், பிரமா திருமால் முதலாக எல்லாத் தேவர்களும் சூழ்ந்து வர முருகப்பெருமான் திருச்செந்தூரை அடைந்தார். பின்னர் முருகப்பெருமான் மயிலை விட்டு இறங்கினார். திருச்செந்தூர் ஆலயத்துட் சென்றார். தேவர்கள் முருகப் பெருமானுக்குத் திருமஞ்சனமாட்டிப் பூசைசெய்ய ஆயத்தமானார்கள். ஆனால் முருகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமான் சிவனுக்கு ஒவ்வொரு மலராகப் போட்டுப்பூசை செய்தார். தேவர்கள் பரவசப் பட்டு, "முருகா" எனக்கூவினர். கையில் ஒரு பூவுடன் முருகப்பெருமான் தேவர்களுக்குக் காட்சி கொடுத்தார். பின்னர் தேவர்களின் பூசையைத் தாமும் ஏற்றார். முருகப்பெருமான் தேவர்களைப் பார்த்து "வேண்டிய வரங்களைக் கேளுங்கள் என திருவாய் மலர்ந்தருளினார்" என்றும் நீங்காத நினைவு தங்கள் திருவடியில் வைக்கவேண்டுமென வரம் தேவர்கள் கேட்டார்கள். சரவணபவன் அவ்வரத்தை அளித்தார்.

முருகப்பெருமான் திருச்செந்தூரை விட்டு மயில் வாகனத்தில் ஏறினார். தேவர்களையும் பிரமா திருமால் இந்திரன் முதலானோரைக் கௌரவிக்க முருகன் நினைத்தார். இதனால் அவர்களை அவரவர் வாகனங்களில் ஏறிக்கொள்ளும்படி பணித்தார்.

தேவர்கள் தத்தம் வாகனங்களில் ஏறி அமர்ந்தார்கள். இரண்டாயிரம் பூதர்களும் சூழ்ந்தன. குடை, கொடி, ஆலவட்டம் நெருங்க முருகப்பெருமான் சேவற்கொடியுடன் மதுரையில் உள்ள திருப்பரங்குன்றத்தை அடைந்தார்.

திருப்பரங் குன்றத்தில் தவம் செய்து கொண்டிருந்த பராசரமுனிவரின் புதல்வர்கள் அறுவரும் பிரமா, திருமால், இந்திரன் முதலியோரும் திருப்பரங்குன்ற மலையில் எழுந்தருளும்படி அன்புடன் வேண்டிக்கொண்டனர். அவர்களின் விருப்பின்படி சுவாமி பூதர்களுடன் ஏறிச்சென்றார். தேவதச்சன் சுவாமிகளுக்கு அழகான கோயில் கட்டினான். சுவாமி அங்கு அழகிய சிங்காசனத்தில் எழுந்தருளினார். இதுவல்லவோ கண்கொள்ளாக் காட்சி. மனம் நிரம்பி வழியப் பெற்ற தேவர்கள் இந்திரன் முதலானோர் திரும்பப் பெற்ற பொன்னுலகு சென்றனர்.

பராசரப் புதல்வர்கள் அறுவரும் முருகப்பெருமானை வணங்கினார். ஆறுமுகப் பெருமான் அவர்களுக்கு ஞான உபதேசம் செய்தார். (தொடரும்)

* * *

கபில பூசை

பசுக்கள் நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை என ஐந்து வகைப்படும். அவைகளுள் நந்தை கபில நிறமும், பத்திரை கருநிறமும், சுரபி புகை நிறமும், சுமனை செந்நிறமும் உடையனவாம்.

சிவபூசாந்தரத்தில் பசுவைப் பூசித்தல் வேண்டும். பசுவை அருக்கியசலத்தினால் புரோட்சித்து

ஓம் கபிலா நந்தாயை நம
ஓம் கபிலா பத்திராயை நம
ஓம் கபிலா சுரபயே நம
ஓம் கபிலா சுசீலயை நம
ஓம் கபிலா சுமனாயை நம

என்று பூசித்து அருக்கியங் கொடுத்து, சந்தனம், புஷ்பம் முதலியவற்றால் அருச்சித்து, அன்னமும் சலமும் ஊட்டி, தூபதீபங்காட்டி.

"நின்மலராகிய சிவபெருமான் ஆன்மாக்களிடத்திற் கொண்ட பெருங்கருணையினாலே அவர்கள் செய்த பாவத்தை நீக்கி மோட்சத்தை அடையும் பொருட்டு தேவர்கள் அமிர்தம் பெற விரும்பி, பாற்கடல் கடைந்த காலத்தில் அக்கடலிற் தோன்றி, ஆன்மாக்களுடைய துன்பத்தைப் போக்கும் பயோதரத்தையுடைய மாதாவே, யான் தருகின்ற புல்லை ஏற்றுக் கொள்க" என்னும் கருத்தமைந்த மந்திரத்தைச் சொல்லிப் புல்லை அருந்துக, பின்பு வலமாக வந்து நமஸ்காரம் செய்க.

நன்றி -சிவபூசை விளக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரமண பகவான் வாழ்க்கையில் ஒரு நாள்.....

செல்வி கு. வாணி அவர்கள்
யாழ். மருத்துவபீடம்

நான் யார் என்ற கேள்விக்கு விடைதேடித் தனது 17ஆவது வயதில் தபோவனம் புகுந்தவர் ரமணர். நமக்கு நாம் யார் என்பதை உணர்த்தியவர். மாயையின் இருட்சாயல் படிந்த இவ்வுலகில் எது மெய்? எது பொய்? என்பதைத் தன் ஞானச்சுடரொளியால் விளக்கிக் காட்டியவர் பகவான். இறைவனே மலையாக எழுந்தருளியிருக்கும் திருவண்ணாமலையில் வாழ்ந்த அந்த ஞானவிளக்கின் சுடரொளி நாடு கடந்து கடல் கடந்து உலகின் எல்லா மூலைகளிலும் பிரகாசித்தது. மனிதர்கள் மட்டுமின்றிப் பிற ஜீவராசிகளும், மரங்களும், புல்லும், மண்ணும் கூட அந்த மனிதனை நேசித்தன. அனைத்து உயிர்களிலும் அன்பு உடையவராகத் திகழ்ந்தார் ரமண பகவான்.

இரவு வேளைகளில் ரமணர் இயற்கையின் உபாதையைக் கழிக்க எப்போதாவது தான் மலைமேல் செல்வார். ஒரு நாள் இரவு அவரிற்கு வயிறு சரியில்லை. ரமணரின் சீடரும் உடன் சென்றிருந்தார். அன்று அவரிற்கு வழக்கத்தை விட அதிக நேரமாயிற்று. எனவே இருட்டில் தள்ளி நின்ற சீடன் ரமணர் அருகே சென்றார். அப்பொழுது விநோதமான ஒலி கேட்டது. "நிறுத்து நிறுத்து இன்னும் உனக்குத் திருப்தியில்லையா?" ரமணர் வசதியில்லாமல் உட்கார்ந்து கொண்டு யாருடனோ பேசிக்கொண்டிருந்தார். ஒரு நாய் அவரை நக்கிக் கொண்டிருந்தது. அது பார்ப்பதற்கு அருவருப்பாகவும், எலும்பும் தோலுமாக இருந்தது.

ரமணர் சீடனிடம் உடனே பேசத்தொடங்கினார். "என்னிடம் அன்பைப் பொழியப் பல நாட்களாக இவன் காத்திருக்கின்றான். ஆனால் பாவம் அப்படிச் செய்ய முடியாமல் விரட்டப்பட்டிருக்கின்றான். இன்று இந்த இருட்டில் எப்படியோ தேடிக் கண்டுபிடித்து விட்டான். என் உடம்பு முழுவதும் நக்குவதன் மூலம் தனது அன்பை வெளிப்படுத்திவிட்டான். இப்போது அவனிற்கு முழுத்திருப்தி" கண்களில் நீர்மல்க எழுந்தார் ரமணர். நாயை நோக்கி "நான் போகலாமா?" என்று கேட்டார். அடுத்தநாட் காலை அந்த நாய் செத்துக்கிடந்தது.

அவ்வாறு உயிரினங்களிடத்தும், மரங்களிடத்தும், மனிதர்களினிடத்தும் ஒரே அன்பு கொண்டவராகத் திகழ்ந்தார் பகவான்.

மனிதராய்ப் பிறந்து, மகானாய் வளர்ந்து, தெய்வமாய் வாழ்ந்து, உலகத்திற்கே ஓர் வழிகாட்டியாக விளங்குகின்ற பகவான் ரமண மகரிஷியின் வாழ்க்கையைப் படிப்பது, மனதைத் தூய்மைப்படுத்தும். வாழ்வை செம்மைப்படுத்தும்.

உங்கள் அபிமான '**அருள்ஒளி**' கிடைக்கும் இடங்கள்

அலுவலகம்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

ஸ்ரீ தர்க்காதேவி மணிமண்டபம்,
கோவில் வீதி,
நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தில் பெண்கள் தொண்டு

கலாநிதி திருமதி A.N. கிருஷ்ணவேணி அவர்கள்

ஆலய வழிபாடு என்பது தொண்டு, சேவையை அடிப்படையாகக் கொண்டது. சமூகத்திற்கு ஆற்றும் எந்த ஒரு வேலையும் கடமையும் இறைவனுக்கு அர்ப்பணம் என்ற பாவனையில் நிறைவேற்றப்படும் போது அது தொண்டாகிறது. இவ்வாறு தொண்டு வழிபாடாக மாறிவிடும். தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானப் பெண்கள் தொண்டர்சபை 1979ம் ஆண்டில் தொடங்கப்பட்டு மிகுந்த உத்வேகத்துடனும், அர்ப்பணிப்புடனும் இன்று வரை தொண்டாற்றி வருகிறது. இன்று பெண்கள் தொண்டர்சபையில் இருபத்தைந்து ஆண்டுக்காலப் பூர்த்தி விழா கொண்டாடப்படுகிறது. இந்நேரத்தில் பெண்கள் தொண்டர்சபையின் தொண்டுகள், அதன் பயன்பாடு, சிறப்பு என்று பல்வேறு விடயங்களையும் நோக்குதல் அவசியமாகிறது.

தேவஸ்தான வழிபாடு, கிரியைகள், சடங்குகள், மகோற்சவம் என்று சகல கோயிற் கர்மாக்களுக்கும் உதவுபவர்கள் பெண் தொண்டர்களே. இத்தொண்டர்சபை அங்கத்தவர்களிற் பலர் வெளிநாடு சென்றிருந்தாலும், இக்கோயில் விழாக்களும் கிரியைகளும் சிறப்புற அமைய இன்று உதவிய வண்ணமுள்ளனர். தொண்டர் சபையைச் சார்ந்த பெண்கள் கோயிற் சரியைத் தொண்டு, மகேஸ்வரபூசை ஆகியவற்றில் சிறப்பாக ஈடுபட்டுவருவது குறிப்பிடத்தக்கது. சேக்கிழாரால் அருளப்பட்ட திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணத்தில், திருஞானசம்பந்த நாயனார் புராணத்தில்,

மண்ணிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலாரடியார் தமை அமுது செய்வித்தல்
கண்ணினாலவர் நல்விழாப்பொலிவு கண்டார்தல்

என்று கூறப்பட்டுள்ளது.

இந்த மண்ணுலகில் வினைக்கீடாக வந்து பிறந்த உயிர்கள் பெறும் பிறவிப்பயனாகிய உறுதிப்பொருட்கள் இரண்டாகும்.

1. இறைவனடியார்களைத் திருவமுது செய்வித்தல்
2. கண்ணினால் இவ்விறைவரது திருவிழாக்களின் பெரும் பொலிவினைக் கண்டு மகிழ்தல்

அடியார்களைத் திருவமுது செய்வித்தல் என்பது தொண்டுகளில் மிகச்சிறந்தது. தானங்களில் மிகப்பெரியது இதுவே மகேஸ்வர பூசை என்று சிறப்பித்துப் பேசப்படுகிறது. பெண் தொண்டர்களே கோயிலிற் சிறப்பாகச் செவ்வாய்க்கிழமைகளிலும் ஏனைய விசேட தினங்களிலும் இடம்பெறும் அன்னதானத்திற்கும் பொறுப்பாக இருந்து தொண்டு மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்து மதத்திற் சக்தி வழிபாடு பண்டைக்காலத் தொட்டு இடம்பெற்று வருகிறது சக்தியைப் பரம்பொருளாகக் கொள்ளும் மதமே சாக்தம். சக்தியை வழிபடுவோர் சாக்தர் என்றழைக்கப்படுவர். பண்டைக்காலந்தொட்டுத் தாய்த்தெய்வ வணக்கம் தனித்துவமான வழிபாட்டு முறையாக இடம்பெற்று வந்ததுடன் காலப்போக்கில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவத்துடனும், வைஷ்ணவத்துடனும் இணைந்து வளரத் தொடங்கியது. சக்திக்கென அமைந்த வழிபாட்டு ஸ்தலங்களில் சாக்த ஆகமங்களான தந்திரங்களின் அடிப்படையில் பூசை வழிபாடுகள் இடம்பெறுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. பரம்பொருளின் ஆற்றலே சக்தி. சக்தியைப் பல்வேறு வடிவங்களில் வழிபடுகின்றனர். வீரமும், கருணையும், நிறைந்த துர்க்கையின் வடிவில் துர்க்காதேவியாக, அழகும் ஆற்றலும் பொருந்தியவளாக அன்னை வழிபடும் ஸ்தலம் துர்க்காதேவி தேவஸ்தானம். பக்தர்களைப் பரவசம் கொள்ள வைக்கும் அம்பாளின் அழகினை ஆதிசங்கரர் தம் சௌந்தரியலகரியிலும், அபிராமிப்பட்டர் தம் அபிராமி அந்தாதியிலும் விவரித்து மகிழ்ந்துள்ளனர். நினைத்தவுடன் கண்முன் தோன்றும் பேரழகும் பெருங்கருணையும் அனுபவத்திற்குரியவை. பக்தியுடன் நெருங்கிய தொடர்புடையது அழகு. இறை வடிவத்தில் அழகில் ஈடுபட்டு லயித்தலே அனுபவிக்கும் பக்தி ரசம் பக்தனை மெய்மறக்கச் செய்கிறது. இத்தகைய அன்னையின் ஆலயத்தில் ஆன்மீகத் தொண்டு செய்தல் கிடைத்தற்கரிய பெரும் பேறாகவே கொள்ளப் படத்தக்கது.

கோயில்களில் ஆகமங்கள் கூறும் விதிப்படி நித்திய, நைமித்திய, காமிகக் கிரியைகள் இடம்பெறுகின்றன. கிரியைகளில் அபிஷேகம், அலங்காரம், நைவேத்தியம், தீபாராதனை, தோத்திரம், அர்ச்சனை, நடனம் யாவும் பொதுவாக இடம்பெறல் வழக்கம். தற்காலத்தில் நடனம் தவிர்ந்த ஏனைய அம்சங்கள் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. இத்தகைய கோயிற் கிரியைகள் சிறப்புற நடைபெறுவதற்குக் காரணமான அடிப்படை ஆயத்தங்களை மேற்கொண்டு சரியைத் தொண்டுகளைச் செய்வார்கள் தொண்டர் சபைப் பெண்களே. திருக்கோயிலைக் கூட்டுதல், கழுவுதல், மலர் பறித்தல், மாலை தொடுத்தல், திருவிளக்கேற்றுதல், இறைவன் நாமங்களை உச்சரித்தல் யாவும் சரியைத் தொண்டின் பால் அடங்குவன. சரியைத் தொண்டினை வெறும் தொழிலாக யாரும் பார்க்க முடியாது. அதுவே ஒருவகை வழிபாட்டு நெறி. சைவம் கூறும் ஆன்மீக சாதனங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. இவற்றுள் சரியைத் தொண்டு எல்லோரினாலும் பின்பற்றக்கூடிய இலகுவான வழிபாட்டு நெறி. சமய குரவர்களில் திருநாவுக்கரசர் இந்நெறி நின்று முத்தியடைந்தவராகக் கருதப்படுகிறார். அவர் தம் திருப்பதிகத்தில்

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே
நீ வா நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு, மெழுக்கிட்டுப் பூமாலை
புனைந்தேத்தில் புகழ்ந்துபாடி, தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி"

என்று இறைவனை வழிபடும் தாசமார்க்கத்தை விளக்கியுள்ளார். நாவுக்கரசரின் தமக்கையாராகிய திலகவதியாரும் இந்நெறி நின்று உய்வு அடைந்தமை குறிப்பிடத்தக்கது.

புலர்தன்முன் திருவலகு பணிமாறி புனிதகன்ற
நலமலி ஆன் சாணத்தால் நன்கு திருமெழுக்கிட்டு
மலர் கொய்து கொடுவந்து மாலைகளும் தொடுத்தமைத்துப்
பலர் புகழும் பண்பினால் திருப்பணிகள் பல செய்தார்.

என்று சேக்கிழார் போற்றுகிறார்

சைவ சித்தாந்த சாஸ்திரங்களில் ஒன்றான சித்தியார் இச்சரியைத் தொண்டினை சரியைத் தொண்டர் இயல்பினையும் விளக்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாதமார்க்கம் சாற்றிற் சங்கரன் திருக்கோயில் தலம் அலகிட்டிலகு திருமெழுக்கும் சாத்திப்போதுகளும் கொய்து பூந்தார்மாலை கண்ணி புனிதர்க்குப் பல சமைத்துப் புகழ்ந்து பாடித் தீதில் திருவிளக்கிட்டுத் திருநந்தவனமும் செய்து திருவேடங்கண்டால் அடியேன் செய்வது யாது பணியீரென்று பணிந்தவர் தம் பணியும் இயற்றுவது இச்சரியை செய்வோர்.

இச்சரியை நெறியில் புறத்தொழிலால் இறைவனது உருவத்திருமேனி வழிபாடு நடாத்தப்படுவது இந்நெறிக்குரிய முத்தியாக சாலோகம் கூறப்படுகிறது. சரியை நெறி வழிபடுவோருக்கு மனப்பக்குவத்தையும், உள்ளத்தில் உறுதியையும் கொடுப்பதுடன் ஏனைய மார்க்கங்களைப் பின்பற்றுவதற்குரிய தகுதிப்பாட்டினையும் அளிக்கிறது.

நாவுக்கரசர் வரலாற்றில் அவரது தமக்கையாராகிய திலகவதியாரின் பங்களிப்பே முக்கியமானது. சமணராக இருந்து தொண்டாற்றிய நாவுக்கரசரை சைவத்திற்கு மீட்பதற்கு மனங்கொண்டு இறைவனை வேண்ட, இறைவன் கொடிய சூலை நோயைக் கொடுத்து அவரை மீட்டதாகச் சேக்கிழார் பாடும் போது "தொண்டரை ஆளத்தொடங்கும் ஆலை" என்று பாடுவது நோக்குதற்குரியது நாவுக்கரசரும்

"சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் எந்நாவில் மறந்தறியேன்"

என்று பாடுகிறார்.

பெண் தொண்டர்களில் ஒப்புயர்வற்றவராகிய காரைக்காலம்மை என்று போற்றப்பட்ட புனிதவதியார் தம் ஆன்மீகத் தொண்டுகள் திருத்தொண்டர் வரலாற்றில் சிறப்புப் பெறுபவை. அவர் தமது அற்புதத் திருவந்தாதியில்

அறிவாறுந் தானே அறிவில்லான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே அறிகின்ற
மெய்ப்பொருளுந்தானே - விரிசுடர் பாராகாயம்
அப்பொருளுந்தானே யவன்.

என்று இறை தத்துவத்தை விளக்குகிறார். இறைவனுக்கு தொண்டு செய்வதே உயர்ந்த நெறியென்பதை அவரும்

கண்டெந்தை என்றிறைஞ்சிக் கைப்பணி யான் செய்யேனேல்
அண்டம் பெறினும் அது வேண்டேன்

என்று கூறுவதிலிருந்து தெரிகிறது.

தாயுமான சுவாமிகள் பாடலும் இக்கருத்தை உறுதிப்படுத்துகிறது.

கண்ணில் காண்பதுன் காட்சி
கையால் தொழில்பண்ணல் பூஜை பகர்வது மந்திரம்
மண்ணோடு ஐந்தும் வழங்கு உயிர் யாவுமே
அண்ணலே நின் அருள் வடிவு ஆகுமே.

காரைக்காலம்மையாரின் பெருவிருப்பத்தைச் சேக்கிழார் மிக அழகாக விவரிக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறவாத இன்ப அன்புவேண்டிப் பாடுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போது உன்னடியின்கீழ் இருக்க என்றார்.

மங்கையர்க்குத் தனியரசியாம் மங்கையர்க்கரசியார் திருநீற்று நெறி வளரத் தொண்டாற்றியவர். அடியார்களை இறைவனாகக் கண்டு போற்றும் தகமையினால் ஞான சம்பந்தரை வருவித்து நெடுமாறனின் வெப்பு நோயை நீக்கி நீற்றின் பெருமையை உணர வைத்தவர்.

இவ்வாறு சைவ வரலாற்றில் ஆன்மீகத் தொண்டர்களின் பங்களிப்பு கோயில் வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டு சமய மறுமலர்ச்சிக்கு வழிவகுத்து மன்னர்களின் மத மாற்றத்திற்கும் காரணமாக அமைந்தமையை அவதானிக்க முடிகிறது. இத்தகைய திருத்தொண்டர்களின் பெருமையையும், சிறப்பையும் திருத்தொண்டர் புராணம், திருத்தொண்டர் புராண வரலாறு, திருத்தொண்டர் புராணசாரம் போன்ற நூல்கள் தெளிவுபடுத்துகின்றன.

ஆலயத்தில் ஆன்மீகத் தொண்டில் ஈடுபட்ட தொண்டர்களின் செயற்பாடுகள் யாவற்றுக்கும் அடிப்படையாக இருந்தது பக்தியே. 'பக்தி' என்பது இறையன்பு. சாதாரண உலகியல் வாழ்வில் சமூக உறவுகள் அனைத்திற்கும் அடிப்படை அன்பு. இது இறைவனிடம் செலுத்தப்படும் போது 'பக்தி'யாகிறது. அன்பைப் பகிர்ந்து கொள்ளல் மூலம் இறைவனை அடையும் நெறி பக்தியே. பக்தி இன்றேல் கர்மமோ ஞானமோ இல்லை என்பது துணிவு.

கிரியை நெறி நின்று இறைவனை வழிபட்ட சம்பந்தர் பக்தியைக் "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" என்று கூறுகிறார். இறைவனிடம் நிலைத்த அன்பு கொண்ட தொண்டர் இயல்பினைப் பெரியபுராணம்

கூடும் அன்பினிற் கும்பிடலேயன்றி
வீடும் வேண்டா வீறலின் விளங்கினார் எனவும்

ஓது காதல் உறைப்பின் நின்றார் எனவும் பாடுகிறார்.

வடமொழி மரபில் இவ்வுயர்ந்த தெய்வீக பக்தி 'பகவத்ரதி' என்று அழைக்கப்படுகிறது. கீதையில் கிருஷ்ணபகவான் பக்தியின் சிறப்பினை "சகலவிதமான தர்மங்களையும் கைவிட்டு என்னை சரணடைந்தால் நான் உன் பாவங்களை நீக்கி மோட்சத்தை அருளுவேன் கலங்காதிரு" என அர்ச்சுனனுக்குக் கூறுகிறார்.

பக்தி நெறியில் நின்று இறைதொண்டில் ஈடுபட்ட நமது ஆன்மீகத்தொண்டர்களின் உள்ளத்துறுதிப்பாட்டைக்

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்" எனவும்

"பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும்
மாதோர் பாகர் மலர்ந்தார் மறப்பிலார்"

எனவும் போற்றுவது கவனிக்கத்தக்கது. உள்ளத்திலே உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும் என்பது பாரதியாரின் கருத்து. அத்தகைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டர்களின் வாக்குகளே பக்தி இலக்கியங்கள். தமிழ் மக்கள் தம் பண்பாட்டில் பக்தி பிரதான இடத்தைப் பெறுவதுடன் அதன் தாக்கமே கலைகளின் வளர்ச்சிக்கும் காரணமாயிற்று.

மேற் கூறப்பட்ட விடயங்களின் அடிப்படையில் துர்க்கை அம்பாள் தேவஸ்தானப் பெண்கள் தொண்டர் சபையினரின் செயற்பாடுகளை நோக்கும் போது பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் வந்து தரிசித்துச் செல்லும் இவ்வாலயத்தில் அவர்களின் தொண்டு பெறும் சிறப்பு தெளிவாகிறது. அவர்கள் சரியைத் தொண்டுகளுடன் சிறப்பாக நடாத்தும் அன்னதானப்பணி குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகிறது. "அண்ணலாரடியார் தமை அமுது செய்வித்தல்" என்பது சேக்கிழார் சிறப்பித்துக்கூறிய அடியவர்களுக்கு அவர் ஆன்மீக சாதனத்தில் ஈடுபடா வழிசெய்வதோடு உணவளித்தும் ஆறுதல்படுத்தம் தொண்டின் பெருமை அளவிடற்கரியது. அடியவர்களுள் நின்று அமுது செய்து பயன்தருபவர் அண்ணலாராகிய இறைவன். அதற்குத் துணை செய்பவர் நம் தொண்டர்களே. இறையருள் இருந்தாற்றான் இறைவனையே வழிபடலாம் என்ற மாணிக்கவாசகர் "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்று பாடுகிறார். அடியார்களுக்குத் தொண்டு செய்வதும் இறையருள் கிட்டியவர்களால் மட்டுமே முடியும் என்பதை இவ்விடத்தில் உணரவேண்டும்.

திருக்கோயிலையும், திருக்கோயிலுக்கு வரும் அடியவர்களையும் இறைவனாக பார்ப்பது சைவ மரபு. திருமூலர் "நடமாடுங்கோயினம்பர் கொன்றீயில் படமாடும் பரமர்க்கதாமே" என்று கூறுவதில் இருந்து இது தெளிவாகிறது. பக்தர்களது திருவேடத்தைப் பரமேசுவரனாகவே கண்டு வழிபடுக என்பது ஞானநூல் முடிபாதலின் அவ்வாறு காண்டலாவது ஐயுறவின்றித் தெளிதல், எனப்படுகிறது. இவ்வழிபாடுகளுட் சிறந்த அங்கமாவது திருவமுதூட்டலாதலின் அதனையும் சிறப்பித்துக் கூறுகிறார் சேக்கிழார். இளையான்குடி மாறநாயனார், சிறுத்தொண்டர் முதலாகப் பத்தொன்பது அடியார்கள் இவ்வழிபாட்டினாற் பயன்பெற்றோராகத் திருத்தொண்டர் புராணம் கூறுகிறது.

தொண்டினால் இறைபதம் அடைந்த நம் திருத்தொண்டர்களை சீவன்முத்தர் களாகவே காண்கிறோம். சீவன் முத்தர்கள் இவ்வுலகில் உடலில் வாழ்ந்தாலும் அப்பற்றுக் களில் இருந்து விடுபட்டவர்கள். சிவனடியார்களையும், சிவன்கோயில்களையும் சிவஞான போதம் 12ம் சூத்திரம்

மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரன் எழுத்தொழுமே

என்று சீவன்முத்தர் இலக்கணம் கூறுகிறது. இதற்கு இலக்கியமாக அமைந்தது பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரியபுராணம்.

இன்றைய நம் நாட்டுச் சூழலில் மக்களுக்கு மக்கள் காட்டும் மரியாதை, அன்பு, மனிதநேயம், சேவை, தொண்டு மனப்பான்மையே அவசியமானது. அரசியல், சமூக, ஆன்மீக விடுதலைக்கு நாம் அனைவரும் எம்மைத் தயார்ப்படுத்துவதற்கு வேண்டிய தனித்துவமான பண்புகள் இவை என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். கோயில் வழிபாட்டைப் பயன்பெறுவதற்கான ஒரு வழி என மட்டும் கொள்ளாது அதனை ஆன்மீக சாதனமாகவும், மக்களுக்காற்றும் சேவையாகவும் கொள்ளுதல் பொருத்தமானது. இத்தகைய சேவை மனப்பான்மையே சமத்துவம், சகோதரத்துவம் போன்ற உயர் பண்புகள் வளர வழிவகுக்கும். வினைக்கீடாக மானுடப் பிறவியைப் பெற்றவர்கள் அப்பிறவியின் பெரும் பயனை உள்ளவாறுணர்ந்து ஆன்மீகத் தொண்டு அனைத்துத் தொண்டுகளுக்கும் அடிப்படையான உளப்பக்குவத்தைக் கொடுக்கிற தென்பதை மனங்கொள்ளல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனைச் சரண் புகுந்தால் அனைத்து வரமும் கிடைக்கும்

சரணாகதி என்பது உதட்டளவில் இருக்கக் கூடாது. கடவுளிடம் முழுமையாகச் சரணடைய வேண்டும். இல்லாவிட்டால் பகவானின் கிருபையைப் பெறமுடியாது.

ஒருமுறை சலவைத்தொழிலாளி ஒருவர் ஒரு பக்தனைக் கடுமையாக அடித்தான் அப்போது பக்தன் "நாராயணா! நாராயணா!" என்று மட்டும் சொல்லி அழுதான். அப்போது ஸ்ரீமன் நாராயணர் வைகுண்டத்தில் லட்சுமி சமேதராக வீற்றிருந்தார். அவர் காதில் இந்தக் கூக்குரல் விழுந்தது. உடனே அவர் எழுந்து புறப்பட ஆயத்தமானார். தேவி அவரிடம் "நாதா! தாங்கள் எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"தேவி! என்பக்தன் ஒருவன் பெரிய ஆபத்தில் இருக்கிறான். அவனை நான் அவசியம் காப்பாற்றியாக வேண்டும்" என்று சொல்லி விட்டு அவசர அவசரமாக நாராயணன் புறப்பட்டார். ஆனால், இரண்டு மூன்று அடிதூரம் சென்றதும் மீண்டும் திரும்பி வந்து அவர் தம் ஆசனத்தில் அமர்ந்த விட்டார். இதைப்பார்த்து லட்சுமி திகைத்தாள். "பிரபு! இவ்வளவு விரைவில் திரும்பிவிட்டீர்கள்? ஏன்?" என்று கேட்டாள்.

நாராயணன் புன்முறுவல் பூத்த படியே பதில் சொன்னார். "நான் போகவேண்டிய அவசியமே இல்லாமல் போனதை உணர்ந்தேன். அந்தப் பக்தனும் சலவைத் தொழிலாளி ஆகிவிட்டான் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ள நினைத்து இப்போது அவன் தன்னை அடித்தவனை திருப்பி அடிக்கத் தொடங்கியிருக்கிறான். ஆகவே; நான் அங்கே போய்ச்செய்ய ஒன்றுமில்லை. எனவே அவசியம் இல்லாததால் நான் உடனே திரும்பி வந்து விட்டேன்!" என்று நாராயணன் சொல்லிவிட்டார்.

முற்றிலுமாக நீ உன்னைக் கடவுளிடம் ஒப்படைத்து விடவேண்டும். அப்படி நீ செய்தாலன்றிக் கடவுள் உன்னைக் காப்பாற்ற மாட்டார். உண்மையாகவே உன்னை நீ பகவானின் பீடத்தில் சமர்ப்பித்தவிடவேண்டும்.

எவன் ஒருவன் கடவுளிடம் முற்றிலுமாகத் தன்னை அர்ப்பணித்து சரணமாகப் பற்றுகின்றானோ அவனை மட்டுமே பகவான் காப்பாற்ற முன்வருகிறார்.

தொகுப்பு: **கி. ஜமுனாதேவி**
மானிப்பாய்

கோதான பலன்

கோதானம் செய்பவர் விஷ்ணு உலகம் செல்பவர். பசு பிரசவிக்கும் போது பசுவின் முகம் ஒரு புறமும், கன்றின் முகம் ஒரு புறமும் இருப்பதால் அதற்கு த்விமுகி எனப்படும். அச்சமயம் அதைத்தானம் செய்தால் கோதானம், பூதானம் செய்த இரண்டின் பலனையும் பெறலாம். அப்பசுவின் உடலில் எத்தனை ரோமங்கள் உள்ளனவோ அத்தனை ஆண்டு காலம் வரை பிரம்மலோகம் பெறுவான். பசுவின் கழுத்திலும் தலையிலும் சமஸ்த புண்ணியத் தீர்த்தங்கள் உள்ளனவாதலால் காலையில் எழுந்து பசுவின் கழுத்தை சொறிந்து விட்டு நமஸ்காரம் செய்தால் 30 வருடம் செய்த பாவம் அகலும். பசியுள்ள பசுவுக்கு புல்லும் நீரும் அளித்தால் கோமேதக பலனைப் பெறலாம். ஒவ்வொரு நாளும் காலையில் கன்றுடன் கூடிய பசுவை விதிப்படி பூஜித்துவர சற்புத்திரர்களோடு சகல சம்பத்துக்களும் பெற்று நீடு வாழலாம்.

நன்றி - ஜிந்துப்பிட்டி முருகன், கும்பாபிஷேக மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவயோக சுவாமிகளின் குருபூசை

'பாமர மக்களுக்கும் ஞானஒளி பரப்பியவர் எங்கள் குருநாதன்'

ஈழவளநாட்டை சார்ந்த யாழ் மாவட்டத்தில் ஓர் சிற்றூர் பெயர் மாவிட்ட புரம். சரித்திரப் புகழ் பெற்றதும், முருகப் பெருமான் அருள்ஒளி வீசும் இந்த மாவிட்ட புரம் சுவாமிகள் பிறப்பிடம். இவர் அம்பல வாணர்-சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினர் புதல்வர்.

சுவாமிகள் இளமையில் தம்மை வெறுத்தார். உறவுத் தொடர்பற்றார். பிரமச்சாரியத்தை மேற்கொண்டார். முருக வழிபாட்டிலிறங்கினார். நல்லைக் கந்தனை நாடினார். யோகநாதனின் வரவைக் காத்திருந்தார் செல்லப்பா சுவாமிகள்.

இவரை விசர் செல்லப்பா எனவும் மக்கள் அழைப்பது வழக்கம். ஏது என்ன வெனில் நல்லைக்கந்தன் மேற்கொண்ட பித்து, இதேபித்தரைச்சந்தித்தார். யோக நாதன் அவர் மீது ஆரம்பித்தனர். இவர் அவர் அருள்பெற்றார் சிஷ்யரானார் சித்தருமானார் யோகசுவாமிகள்.

கதிர்காம யாத்திரை

முருகபக்தரான யோகசுவாமிகள் கதிர்காம யாத்திரையை முடித்துக்கொண்டு வழி நடந்து அம்பாந்தோட்டை மாத்தறை, காலி மார்க்கமாகக் கொழும்பு வந்து சேர்ந்தார். கொச்சிக்கடையில் ஓரிடத்தில் தங்கி இருந்து பிச்சையெடுத்துண்டு வந்தார். தெருக்கரையில் கரிவேலை செய்து கூலியாட்களுடன் படுத்துறங்கிய வர். கதிர்காமத்தில் முன்கண்டது போல் பெரிய ஆனைக்குட்டிச்சாமியை இங்கு சந்தித்தார். அவர் ஓர் ஐந்து சதத்தைக் கொடுத்து 'இது தும்பிக்கை அது நம்பிக்கை' என்று வாழ்த்தி அனுப்பினார். பிச்சைக்காரன் போல் சேர்.பொன்னம்பலம் அருணாசலத்திடம் சென்றார். அவர் ஓர் இருபத்தைந்து சதத்தை மாற்றுவித்து சுவாமிக்கு பத்துச்சதம் கொடுத்தார்.

பின் கொழும்பிலிருந்து கண்டி வழியாக மாத்தளைக்குச் சென்றார். துணியும் கந்தையாக அலங்கோல ரூபமாகக் காளை மாடுபோல் நடந்தார் என்றே கூறுகிறார். எம்பிரான் தோழன் அருள் புரிவானாயினன் சிவதொண்டன் நிலையத்தை நிறுவிய சங்கரத்தை வாசியான அமரர் தில்லையம்பலம் அவர்களின் மாமனார் சரவணமுத்து அங்கு வாழ்ந்து வந்தார். அவருடைய கனவில் எம்பிரான் தோன்றி என்னுடைய பக்தன் நடந்து மெலிந்து கதிர்காமத்திலிருந்து வருகிறான். அவனை ஆதரித்து புதுஉடை கொடுத்து புகையிரத வண்டி மூலம் பணம் கொடுத்தனுப்பிவிடு என்று விண்ணப்பித்தார். விடிந்தெழுந்து சரவணமுத்து வழிபார்த்து நின்றார். சுவாமிகளைக் கண்டதும் 'இவர்தான்' என்று எண்ணி அவரை அழைத்துச் சென்று ஸ்நானஞ் செய்வித்து உணவு கொடுத்து ஆதரித்தார். ஓர் இரவும் ஓர் பகலும் அங்கு தூங்கினார். இறை வனுடைய பேரருளைக் கண்டார் பொதி சோறு கொண்டு அன்பன் சரவணமுத்து வாக உருத்தாங்கி அருளிய இறைவனை நினைத்து பாடுகிறார் சுவாமிகள்.

'அப்பனும் அம்மையும் நீயே, அரிய சகோதரரும் நீயே
ஒப்பில மனைவியும் நீயே, ஓதரும் மைந்தரும் நீயே
செப்பில் அரசரும் நீயே, தேவாத தேவரும் நீயே
இப்புவி யெல்லாம் நீயே, என்னை யாண்டதும் நீயே'

நான்கு வருடமளவில் துறவியாக, ஊர் ஊராய் காடு வழியே அலைந்து திரிந்த சுவாமிகள் மாத்தளை வந்து சேர்ந்த மறுநாள் யாழ்ப்பாணம் திரும்ப வேண்டுமென்றார். சரவணமுத்து சொற்ப பணம் கொடுத்தார். அதில் புகையிரத வண்டிச்சீட்டிற்கு வேண்டிய பணத்தை மாத்திரம் பெற்றுக்கொண்டு மிகுதியைத் திருப்பிக் கொடுத்தார். புகை வண்டியிலேறி மறுநாள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். சுவாமிகளின் முதற் கதிர்காம யாத்திரை முற்றுப்பெற்றது. பின்பு பலமுறை சுவாமிகள் இரத்தினபுரிக்குச் சென்று அமரர் தில்லையம்பலம் வீட்டில் தங்கியிருந்து 'அங்குமிங்கும் எங்கும் உள்ளானே அரிய இரத்தினபுரியானே' என்றுபாடிப் படித்தும் சுவாமிகளுடன் அமரர் தில்லையம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகிதம் சில அடியார்களும் சேர்ந்து பல தடவைகள் கதிர்காம யாத்திரை சென்றது மறக்க முடியாத அனுபவங்களை எனது அருமைத் தந்தையார் அடிக்கடி நினைவு கூர்ந்து ஆனந்தமடைவதுண்டு. சுவாமிகளின் விருப்பப்படி 1930ஆம் ஆண்டில் இரத்தினபுரியில் சிவன்கோயிலும் உருவாகியது.

யாழ். நகர மக்களுக்கும் தம் ஞான ஒளி பரப்பிப் பக்தர்களைப் பரமன்பதம் ஈர்த்து ஈடேற்ற பரம ஆசான் நம் யோகசுவாமிகள் இறைபக்தி எனும் ஒளி குன்றி வருங்கால் தம் தியானம் திருமறை ஓதுதல் அறிவுரை இறைமூலம் அன்பர்களுக்கு ஆறுதலாய் ஆன்மீக ஆசானாய் சீவன் முத்தராய்த் தூயநிலை எய்தி என்றும் இறைபக்தியுடன் இரண்டறக்கலந்து திகழ்ந்தார். சுவாமிகள் அருளிய நற்சிந்தனைகள் பல அன்பர் களுக்கு இன்றும் ஆன்ம ஈடேற்றத்திற்கு நல்வழி காட்டுகிறது.

சுவாமிகள் ஒரு சித்தர். சித்தராதல் மிக மிக அரிது. சித்தர் எனும் சொல்லே ஆன்மீக வாழ்விற்கு சித்தி பெறுதலாகும். எம் உடம்புடன் வாழும் போதே பேரின்ப வீட்டு நெறியை அடைபவர் சித்தர். இதனால் ஏற்பட்ட சொல்வடிவே 'சித்தன் போக்குச் சிவன் போக்கு' இந்நிலை அடைந்தவர் தாம் நம் யோகசுவாமிகள். சித்தருட் சித்தராய் நின்று சிவபிரானின் திருவருட் செயலாகப் பலர் பிணிகளையும் துயர்களையும் ஒழித்து அருள்மழை பொழிந்து சித்தருள் ஒருவரே நம் சிவயோக சுவாமிகள்.

துட்டரைக் கண்டால் தூரத்தில் ஒற்றியும் பக்தரைக்கண்டால் பக்கத்தில் அணைத்தும் அவரவர் பாவ வினையைப் போக்கவும் நல்வழிப்படுத்தவுமாக அணைத தும் கடிந்தும் ஆசிகூறி ஆறுதல் மொழி தந்திடுவார்.

சிவதொண்டன் நிலையம் - யாழ்ப்பாணம்

சுவாமிகள் நடமாடும் தெய்வமாக இருந்த காலத்தில் அவரின் அருட்கண் பார்வையில் 1953ஆம் ஆண்டு யாழ் வண்ணார்பண்ணையில் சிவதொண்டர் நிலையம் உருவாகியது. சுவாமிகளின் வழிகாட்டலில் மிகக் கட்டுப்பாடுகளுடனும் ஒழுங்கு முறைகளுடனும் வளர்ந்த ஒரு ஆன்மீக விருட்சம் தான் யாழ் சிவ தொண்டர் நிலையம். சிவதொண்டன் நிலையத்தின் ஆன்மீக முக்கியத்துவத்தை மனப்பூர்வமாக நன்கு உணர்ந்து சில அன்பர்களை நிர்வகிக்கும்படி சுவாமிகள் ஆரம்பகாலத்தில் நியமனம் செய்தார். அந்த மரபு இன்றும் யாழ்ப்பாணம் சிவ தொண்டன் நிலையத்தில் தொடருகிறது. கடந்த 47 வருடங்களாக சிவதொண்டன் நிலையத்திலே தங்கியிருந்து இன்றும் 91வது வயதிலும் தூய சிவதொண்டு செய்து செய்பவர் ஸ்ரீ செல்லத்துரை சுவாமிகள்.

யாழ் சிவதொண்டன் நிலையத் திற்கு பல தடவைகள் சென்று அங்கேயே தங்கியிருந்து அதன் ஆன்மீக மகிமையை உணர்ந்து போற்றிப் புகழ்ந்த சில பெரியார்களுள் சுவாமிகளுடன் நன்கு பழகிய தமிழ் நாட்டைச் சேர்ந்த கல்வி மேதைகளாகிய அமரர்கள் தமிழ் பேராசிரி யர்களான தொ.ப.மீனாட்சி சுந்தரனார் (முன்னாள் உபவேந்தர் மதுரைப் பல்கலைக்கழகம்), கலாநிதி டி.எம்.பி. மகாதேவன் (முன்னாள் இயக்குனர், தமிழ் ஆராய்ச்சித்துறை சென்னைப் பல்கலைக் கழகம்) அறிஞர் அ.ச. ஞான சம்பந்தன், மற்றும் ராமகிருஷ்ணமிஷனைச் சேர்ந்த பல சுவாமிகளுமாவார். கடந்த வருடம் கனடாவுக்கு வருகை தந்து சிவயோக சுவாமிகள் குருபூசையில் கலந்து கொண்டு அருளுரை ஆற்றிய கவாய் சற்குரு போதிநாதசுவாமிகள் யாழ் சிவதொண்டன் நிலையத்தின் தியான மண்டபத்தில் தனக்கு கிடைத்த பூரண அமைதி பற்றிய அனுபவத்தை உருக்கமாகக் கூறினார்.

சிவயோக சுவாமிகளின் ஆசியுடன் கிழக்கிலும் செங்கலடியிலும் 1966ஆம் ஆண்டில் சிவதொண்டன் நிலையம் உருவாகியது. அங்கும் பல சிவதொண்டுகள் இன்றும் நடைபெற்று வருகின்றன.

குருபரன் திருவடிக்கலப்பு

யாழ்ப்பாணத்தின் சோதியாக விளங்கிய யோகர்சுவாமிகள் 23-03-1964 திங்கட்கிழமை இரவு 3-18 மணியளவில் சிவபதமடைந்தார். இச்செய்தி வானொலி மூலம் ஈழநாடு முழுவதும் தெரிவிக்கப் பட்டவுடன் ஈழநாட்டின் பல பாகங்களி லுமுள்ள அடியார்கள் ஏராளமானவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து சேர்ந்தனர். 24-03-64 செவ்வாய்க் கிழமை முழுமையும் அடியார்களும் வித்தியாசாலை மாணவ மாணவிகளும் பிறரும் கொழும்புத்துறை ஆச்சிரமத்தில் வைக்கப்பட்டிருந்த சுவாமிகளின் பூதவுடலைத் தரிசித்து அஞ்சலி செலுத்தினார்கள். பக்தர்கள் கூட்டம் கூட்டமாக திருமுறைகள் மற்றும் தமிழ்த் தோத்திரங்கள், நற்சிந்தனைப் பாடல்களை மனம் கசிந்துருக இசையுடன் ஓதினார்கள். 25-03-64 புதன் கிழமை அதிகாலை 5-00 மணியளவில் சுவாமிகளுடைய பூதவுடலுக்கு பக்தி சிரத்தையுடன் அபிஷேகம் செய்யப்பட்டது. அவருடைய பூதவுடல் தூய வெண்டுகிலினாலும், பூமாலைகளாலும் அலங்கரிக்கப்பட்ட பின் பூமாலைகளால் அலங்கரிக்கப்பட்ட சதுர வடிவமான தொட்டிலில் வைத்துக் கொழும்புத்துறை வீதி வழியாகத் துண்டிச்சுடலைக்கு அடியார்கள் சுமந்து சென்றார்கள். சுவாமிகளுடைய ஆச்சிரமத்திலிருந்து சுடலை வரையுள்ள பாதை இருபக்கம் மகரதோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பூதவுடல் சென்ற வழியே வசிக்கும் மக்கள் வீட்டு வாயில்கள் தோறும் குத்துவிளக்குகள், நிறைகுடம் வைத்துப் பூமாரி பொழிந்து சுவாமிகளுக்குத் தங்கள் அன்பையும், வணக்கத்தையும் செலுத்தினார்கள். பூதவுடல் ஊர் வலம் வந்த பொழுது பஜனைக் கோஷ்டியினர் பக்திப்பாடல்கள் ஓதினார்கள்.

முற்பகல் 9 மணியளவில் பூதவுடல் மயானத்தை அடைந்தது. பல்லாயிரக்கணக்கான ஆண்கள், பெண்கள், சிறுவர்களுமாகத் தகனக்கிரியையைப் பார்ப்பதற்காகக் கூடினார்கள். தொண்டர்கள் அவர்களை பெண்கள் வேறாகவும் ஆண்கள் வேறாகவும் உட்காரச் செய்தார்கள். எங்கும் அமைதி நிலவியது.

பூதவுடல் பூந்தொட்டியிலிருந்த விறகுகளினாலும் கால் அந்தருக்கு மேற்பட்ட சந்தனைக்கட்டைகளாலும் அமைக்கப்பட்ட சிதையின் மீது வைக்கப்பட்டது. யாவரும் யோகசுவாமிகளின் அருளைத் தியானம் செய்து கொண்டிருந்தார்கள். கொக்குவில் திரு. குமாரசுவாமிப்புலவர் திருவாசகப் பாக்கள் சிலவற்றையும், ஒரு புராணத்தையும் உருக்கமாக ஓதிய பின்பு, ஈகை நெருப்பு மூட்டப்பட்டது. யாவரும் அரோகராவென்று கோஷமிட்டுச் சோதியை வழிபட்டனர்.

இவ்வைபவத்தைப் பார்வையிட்டு சுவாமிகளுக்குத் தங்கள் அஞ்சலியைச் செலுத்துவதற்காகச் சிங்கள சகோதரர்களும் இஸ்லாம் மதத்தவர்களும் கிறிஸ்தவர்களும் சமூகமளித்திருந்தார்கள்.

இங்ஙனம் எல்லோரும் சுவாமிகள் சோதியுட் கலந்த வைபவத்தைத் தரிசித்தார்கள். இந்நிகழ்ச்சிகளையெல்லாம் கண்ணுற்ற பொழுது அந்த இடமே பூலோக கைலாயமாகத் தோற்றமளித்தது.

'நான் ஐம்பது வருடத்துக்கு மேலாகச் செய்ய வேண்டியவற்றை எல்லாம் செய்து விட்டேன். ஒரு குறையும் விடவில்லை' என உருக்கமாகச் சுவாமிகள் கூறியுள்ளார்கள்.

ஆகவே சுவாமிகள் அரைநூற்றாண்டுக்கு மேற்பட்ட காலமாக நமக்குக்காட்டிய வழியை பின்பற்றி உய்தியடைவோமாக.

ஒரு பொல்லாப்புமில்லை
எப்பவோ முடிந்த காரியம்
நாமறியோம்
முழுவதும் உண்மை.

நற்சிந்தனை

நல்ல மருந்து

நல்ல மருந்தொரு குருமருந்தை நான்
நல்லூரிற் கண்டேன் (நல்ல)
எல்லையில் லாப்பிணி தீர்க்கு மருந்து
இல்லை யெனாது கொடுக்கும் மருந்து
ஏழை யடியார்க் கிரங்கு மருந்து (நல்ல)
வல்லவன் செல்லப்பன் தந்த மருந்து
வாழ்த்தும் கணபதிக் குவந்த மருந்து
புல்லர்கள் கண்டும் புசியா மருந்து
புண்ணியர் யோகர் புசிக்கு மருந்து (நல்ல)

தையல்நாயகி தாயே
இது நல்ல தருணம் அம்மா
வையம் புகழும் வண்ணை மாநகரில்
வந்த வாணியே சிவகாமியே
கந்த சுவாமியைப் பெற்ற
தையல்நாயகியே தாயே
தையல்நாயகிதாயே – சிவயோகசுவாமிகள்

சிவதொண்டன்

தில்லையம்பலம் சிவயோகபதி
நன்றி செந்தாமரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்தாரும் சக்தி தாயே

அருளொளித் திறங்காட்டி அவனியில் எமையாளும்
அன்பரசி நீதானம்மா
ஆதார சக்தியென உலகுபுகழ் ஆரணியே
ஆனந்த ஒளிகூட்டம்மா
இருளோட வழிகாட்டி இன்னருள் சுரந்தவள்நீ
ஈசனது பாதிநீயே
இடர்தீர வழிகாட்டும் கேசவனார் சோதரியே
இன்னருள் ஒளிகூட்டம்மா

அன்னையே என்றுனது திருவடித் தாமரைகள்
பணிந்தாலும் பதிலில்லையோ?
ஆதார சக்தியென உலகுபுகழ் அம்பிகையே
அருளிளொளிச் சுடர்கூட்டம்மா
இன்னல்கெட நல்லவழி கூட்டியருள் காட்டிடவே
இங்குமொளி தந்ததாயே
இதயமலர்ப் பூச்சொரிந்து உன்னடியே பணியுமன்பர்
வினைநீக்கி வழிகாட்டம்மா

அன்னையே அகிலமும் புகழ்கின்ற என்தாயே
ஆதிபரா சக்திநீயே
அபிராமி சிவகாமி மகமாரி திரிசூலி
ஆனந்த வல்லியுமையே
இன்னருள் மிகுகூட்டி இடர்நீக்கி எமையாளும்
இமவானின் திருச்செல்வியே
ஈசனுக்கும் சக்தியருள் மலைமகளே மாதாவே
இராஜ ராஜேஸ்வரியே

பொல்லா வினைசூழ்ந்த புவியினிலே படுதுயரம்
எல்லைகடந் தாடுதம்மா
வல்லவியே வானவர்கள் தொழுதேற்றும் வைஷ்ணவியே
வந்துமருள் தருவாயம்மா
பல்லோரும் புகழ்கின்ற பார்பதியே உமையவளே
பரதவர் குலத்தோன்றலே
எல்லையில் உன்கருணை மலர்சிந்தி எமையாளும்
எழிலரசி சக்தியுமையே

கண்கள் குளிர்ந்திடக் காட்சிதந் தருளிடும்
கௌரிகா மாட்சிதாயே
கலிநீக்கி வலியருளும் சக்தியே திரிபுர
சுந்தரி துர்க்கை நீயே
மண்ணினை அளந்தொளி தந்திடச் சமயபுரம்
வந்தமகா மாரிதாயே
மாதாவே அருள்தாரும் எம்தாயே மலைமகளே
மாயவனார் தங்கையருளே

கண்ணில்லாக் குருடரும் கண்ணொளி பெற்றிட
காட்சிதந் தருளும்தாயே
காமாட்சி மீனாட்சி காசிவாழ் வியாலாட்சி
கண்மலர் ஒளிசிந்தம்மா
மண்ணிலுன் மகிமையை நாம்கண்டு மகிழவோர்
மாதாவே வழிகாட்டம்மா
மலர்க்கரம் கூப்பியே தொழுமடியார் வினைதீர்க்கும்
மலைமகள் சக்தியுமையே

உன்னையே நம்பினோம் உற்றதுணை வேறில்லை
உடன்வந்து அருளும்தாயே
உலகளந்த நெடுமாலின் உடன்பிறப் பானவளே
ஊறுகெட வழிகாட்டம்மா
இன்னுமேன் தாமதம் இரக்கமே காட்டுவாய்
இடர்தீர்க்கும் மருந்தும்நீயே
ஈடில்லாப் பெருங்கருணைத் தேன்சொரியும் எம்தாயே
இனியவழி காட்டுவாயே

கவியாக்கம்: **சு. குகதேவன்**
தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில் அறிவாலய திறப்பு விழாக் காட்சிகள்



20-03-2005 அன்று
அன்னை சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

நூல் நிலையம்

அரும்பொருட் காட்சியகம்

தமிழ் வேந்தன் பராராஜசேகரன் உருவச்சிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறப்பணிகள் ஆற்றும் வட்டு இந்து வாலிபர் சங்கம்

சுனாமி அனர்த்தத்திற்கான
நிவாரணப்பணி

எமது பராமரிப்பில்
உள்ள
ஒரு பகுதி மாணவர்கள்

கிழக்கு மாகாண வெள்ளத்தினால்
பாதிக்கப்பட்ட மக்களுக்கான
நிவாரணம்

சுனாமி அனர்த்தத்திற்கான நிவாரணப்பணி
கதிரையில் அமர்ந்திருப்பவர் (வலது)
திரு.சீ.திருஞானசம்பந்தர்
உலக உணவு ஸ்தாபனப் பிரதிநிதி
லைபீரியா பிரதிநிதியை முன்னாள் அங்கத்தவர்.
கதிரையில் அமர்ந்திருப்பவர் (இடது)
திரு.க.ஆதித்தன்
பிரதம ஆராய்ச்சிப் பொறியியலாளர் சிங்கப்பூர்
எமது முன்னாள் அங்கத்தவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org